பொருளடக்கம்

அண்ணல் நபியின்

உருவத் தோற்றம்

குலாம் ரசூல்



காஜியார்
புக் டிப்போ
தஞ்சாவூர்

பொருளடக்கம்

சில சொற் பொருளடக்கம்

அல்ஹம்துலில்லாஹ்!

'அண்ணல் முஹம்மத் நபி (ஸல்-அம்) சரிதை யின் நான்காம் — இறுதிப்—பாகம் எல்லாம் வல்ல அல்லாஹ் வின் கிருபையால் இப்பொழுது 'அண்ணல் நபியின் உருவத் தோற்றம்' என்ற பெயர் தாங்கி வெளிவந்துள் ளது. அண்ணலாரின் வரலாற்றைப் புதிய பாணியில் அமைக்க வேண்டுமென்ற பேரவாவுடன், பல சம்பவங்களைப் பல உருது நூற்களிலிருந்து பொறுக்கியெடுத்து இதில் தொகுத்துள்ளேன். இத்தோடு வெளியான நான்கு பாகங் களிலும் இன்னும் பல சம்பவங்கள் விடுபட்டுப் போயின. இன்ஷா அல்லாஹ் அடுத்தப் பதிப்பில் இணைத்துக்கொள்ள முயற்சிக்கிறேன். வஸ்ஸலாம்.

திருச்சி,
24—11—93

ஊழியன்
குலாம் ரசூல்

ஏன் வெளியிடுகிறோம்?

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே!

'அண்ணல் முஹம்மத் நபி (ஸல்-அம்) சரிதை யின் கடைசிப் பாகத்தினை அல்லாஹ்வின் கிருபையாலும். உங்களனைவரின் துஆ பரக்கத்தாலும் இப்பொழுது வெளி யிட்டுள்ளோம். இது வரை வெளியான நான்கு பாகங்களை யும் சேர்த்து ஒரே வால்யூமாக வெளிக் கொண்டு வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, மிக சுறுசுறுப்புடன் ஆக்க வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்ஷா அல்லாஹ் வெகு விரைவிலேயே பல வண்ணங்களில் அழகான முகப் புடன், மிகவும் குறைந்த ஹதியாவில் வெளிவரவிருக்கிறது. என்றும் போல உங்கள் பேராதரவை நல்கி எல்லா முஸ்லிம்களின் கரங்களிலும் இந்த முழு வால்யூம் மிளிர ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

தஞ்சாவூர்
24-11-93

காஜியார் புக் டிப்போ

உள்ளே! பொருளடக்கம்

—★—

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பொருளடக்கம்

1. அண்ணல் நபியைக் காணவந்த தூதுக் குழுக்கள்!

''(நபியே! உமக்கு) அல்லாஹ்வுடைய உதவியும், (மக்காவின்) வெற்றியும் கிடைத்து, அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நுழைவதையும் நீர் கண்டால், (அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு) உம்மிறைவனைப் புகழ்ந்து துதி செய்து அவனுடைய (அருளையும்)மன்னிப்பையும் கோருவீராக! நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை அங்கீகரித்து) மன்னிப்புக் கோருதலையும் அங்கீகரிப்பவனாக இருக்கிறான்.''

—அல்குர்ஆன், அத்தியாயம்-110, வசனங்கள்: 1, 2, 3

''யார் மன்னிக்கும் இயல்புடையவராயிருக்கிறாரோ அவரை அல்லாஹ்வும் மன்னித்து அருள் புரிவான்; சோதனையின்பொழுதுபொறுத்திருப்பவருக்கு அல்லாஹ் நற்பலனை ஏற்படுத்துவான்; பொறுமையின் கூலியை அல்லாஹ் பன்மடங்காக்குவான், அல்லாஹ் தடுத்த காரியங்களைச் செய்து பாவங்களில் உழல்பவனை அல்லாஹ் தண்டித்துப் பார்க்காமல் விடுவதில்லை.''

— அண்ணல் நபி (ஸல்-அம்)

''மக்கள்மீது ஒரு காலம் வரும்; அப்பொழுது வாழும் நல்லவர்களும், பெரிய மனிதர்களும் நன்மைசெய்யும்படி பிறரைத் தூண்டமாட்டார்கள், தீமையைத் தடுக்கமாட்டார்கள். 'அல்லாஹ்வுக்காகக் கோபிப்பது' என்ற பழக்கத்தை அவர்கள் கைவிட்டதால் மக்கள் அவர்களைத் 'தங்கமான மனிதர்கள்' எனப்புகழ்ந்து கூறிக் கொண்டிருப்பர்.''

—ஹஜ்ரத் உமர் (ரலி)

"அண்ணல்பால் பேச வந்தோர்
அவர்முன்னம் மாறிச் சென்ற
எண்ணரும் வியப்பைப் பற்றி
எடுத்துரைப் பதுவோ நெஞ்சே!"

—மவுலவி பாஜில் ஜி.எம். ஸிராஜ் பாகவி

மக்கா வெற்றிக்குப் பின் ஹுனைன், தபூக் என்ற இரண்டு யுத்தங்கள் நடந்துள்ளன. அண்ணலார் கண்ட யுத்தக் களங்களைப் பற்றி ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளது. இந்த யுத்தங்களில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும் நோக்கத்துடனும் மற்றும் அண்ணலாரைச் சந்தித்து இஸ்லாத்தைப் பற்றிய விவரங்கள் அறிந்து முஸ்லிமாகி விடும் நோக்கத்துடனும் பல தூதுக் குழுவினர் அண்ணலாரின் சமூகத்தில் வந்துள்ளனர். இந்தத் தூதுக் குழுவினரின் எண்ணிக்கை பலவாக இருப்பினும், 19-தூதுக் குழுவினரின் விவரங்கள் மட்டும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. ஹிஜ்ரீ எட்டிற்கும், ஹிஜ்ரீ பத்திற்கும் இடையேதான் இந்தத் தூதுக் குழுவினர் பெரும்பாலோரின் எண்ணிக்கை வருகிறது. இனி இவர்களின் விளக்கத்தைக் காணலாம்.

எது முக்கியம்? பொருட்களா? ஆட்களா?

1. ஹவாஜின் தூதுக் குழு:

மக்கா வெற்றிக்குப் பின் முதலாவதாக அண்ணலாரைச் சந்திக்க வந்த குழு இதுதான்! அப்பொழுது அண்ணலார் 'ஜஅரானா' என்ற இடத்தில் தங்கியிருந்தார்கள். இந்தக் குழுவில் 14—பேர் இருந்தனர். இக்குழுவில் அண்ணலாருக்குப் பாலூட்டிய ஹஜ்ரத் ஹலீமா ஸஅதியா (ரலி) அவர்களின் குடும்பத்தினரும் இருந்தனர். ஜுஹைருப்னு ஸஅதி இக்குழுவின் தலைவராக இருந்தார். ஹுனைன் யுத்தத்தில் பிடிபட்ட தங்களைச் சார்ந்தோரையும், கைப்பற்றிய பொருள்களையும் திருப்பிக் கொடுத்து விடுமாறு இக்குழுவினர் அண்ணலாரிடம் முறையிட்டனர். அந்தக் குழுவினர் விரைவில்

அண்ணலாரைச் சந்திக்க வராததால் கைது செய்யப்பட்ட ஆட்களையும், கைப்பற்றிய பொருள்களையும் முஸ்லிம்களிடையே பங்கிட்டு விட்டதாகவும், எனவே கைது செய்யப்பட்ட ஆட்கள் அல்லது பொருள்கள் இரண்டிலொன்றைத் திருப்பி ஒப்படைக்கத் தாங்கள் ஏற்பாடு செய்வதாகவும் அண்ணலார் சொன்னார்கள். பொருட்கள் வேண்டாமென்றும், தங்களுக்கு ஆட்கள்தான் தேவையென்றும் குழுவின் தலைவர் கூறினார். அதன்படி கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து விடும்படி அண்ணலார் உத்திரவிட்டார்கள். விடுதலையான கைதிகளில் ஆறாயிரம் பெண்களும், குழந்தைகளும் இருந்தனர்.

—ஆதாரம்; 'ஜுர்கானி'

கூழுக்கும் ஆசை! மீசைக்கும் ஆசையா?

2. ஸகீஃப் தூதுக் குழு:

ஹிஜ்ரீ—9 ரமழான் மாதத்தில் ஸகீஃப் தூதுக் குழு ஒன்று அண்ணலாரைச் சந்தித்து வாக்குறுதி ('பைஅத்') செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் வந்திருந்தது.

இந்த் ஸகீஃப் கூட்டத்தினர்தான் தாயிப் முற்றுகையின் பொழுது அண்ணலாரையும், முஸ்லிம்களையும் பல துன்பங்களுக்குள்ளாக்கியது. அத்துன்பங்களைத் தாங்கமாட்டாது முஸ்லிம்கள் எல்லோரும் தோல்வியைத் தழுவிப் பின் வாங்க நேர்ந்தது. இந்தக் குழுவில் சுமார் ஓராயிரம் பேர் இருந்தனர். இவர்கள் வருகையைக் கண்டதும் முஸ்லிம்களுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அண்ணலார் இவர்கள் தங்குவதற்காக மஸ்ஜிதே நபவிக்கு அருகிலேயே கூடாரங்கள் அமைக்க உத்திரவிட்டார்கள். காரணம் முஸ்லிம்கள் தொழுவதையும், திருக்குர்ஆன் ஓதுவதையும் அவர்கள் காண நேரும் பொழுது இஸ்லாத்தின் மீது அவர்களுக்குப் பற்றும், பாசமும் அதிகம் ஏற்படட்டும் என்பதற்காகவே.

ஸகீஃப் குழுவினர் இஸ்லாத்தில் தாங்கள் இணைந்து கொள்ள மூன்று நிபந்தனைகளை விதித்தார்கள். அவ்வ வருமாறு:

1. தாங்கள் தொழாதிருக்க அனுமதிக்க வேண்டும்.

2. எங்கள் பெண்களும், குழந்தைகளும் எங்களின் அதிக மதிப்பிற்குரிய தெய்வமான 'லாத்'தை அதிகம் விரும்புவதால் அதனை மூன்று வருட காலம் வரைச் சிதைக்காதிருக்க வேண்டும்.

3. தாங்கள் வணங்கி வந்த தெய்வங்களை எங்களைக் கொண்டு சிதைக்காதிருக்கச் செய்ய வேண்டும்.

அண்ணலார் முதலிரண்டு நிபந்தனைகளையும் ஏற்க மறுத்து மூன்றாம் நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு இக்குழுவினர் அனைவரும் முஸ்லிமானார்கள். இந்தக் குழுவில் உதுமானிப்னு அபில் ஆஸ் என்பவர்தான் வயதில் மிகவும் சிறியவராக இருந்தார். என்றாலும் இஸ்லாமியக் கடமைகளை மிகவும் சந்தோஷத்துடன் நிறைவேற்றி வந்தார். எனவே ஸகீஃப் குழுவினருக்கு அவரைத் தலைவராக்கப்பட்டது. பிறகு இக்குழு தாயிப் திரும்பிச் சென்றது.

—ஆதாரம் 'திர்மிதீ', 'ஜுர்கானி'

பேச்சைக் கொடுத்துக் கொல்ல சதி!

3. பனூ ஆமிரிப்னு ஸஅஸஆ தூதுக் குழு:

தபூக் யுத்தத்திற்குப் பிறகு பனூஆமிரிப்னு ஸஅஸஆ ஒரு தூதுக் குழுவுடன் அண்ணலார் சமூகத்தில் ஆஜரானார்: இந்தக்குழுவில் ஆமிரிப்னு துஃபைலும், அர்பதிப்னுகைஸூம் இருந்தனர்; அவர்களிருவரும் கெட்ட நோக்கத்துடன் வந்திருந்தனர். ஆமிர், அர்பதிடம் இரகசியமாக "நான் அவருடன் (அண்ணலாருடன்) பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருப்பேன்; சமயம் வாய்க்கும் பொழுது நீ அவரை (அண்ணலாரை) ஒரே வெட்டில் தீர்த்துக் கட்டி விடு!" என்று கூறி

வைத்து அண்ணலாரிடம் பேச்சைக் கொடுக்கவாரம்பித்தான்:

ஆமிர் ; ''நான் தங்களின் உற்ற நண்பனாக இருக்க விரும்புகிறேன்.''

அண்ணலார் : ''நீர் 'அல்லாஹ்தான் வணக்கத்திற்குரியவன்' என்பதை ஏற்றுக் கொள்ளாதவரை இது ஆகக் கூடிய காரியமன்று.''

ஆமிர்: ''நான் முஸ்லிமாகி விட்டால் நீங்கள் என்ன தருவீர்கள்?''

அண்ணலார்: ''மற்ற முஸ்லிம்களுக்கு என்ன உரிமைகளும், கடமைகளும் தரப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் உமக்கும் தரப்படும்!''

ஆமிர்: ''உங்களுக்குப் பிறகு உங்களின் பிரதிநிதியாக, முஸ்லிம்களின் அதிபதியாக என்னை நியமிப்பீர்களா?''

அண்ணலார்; ''அது கண்டிப்பாக முடியாது!''

ஆமிர்: ''எங்கள் கூட்டத்தார் மீது நீங்களே ஆதிக்கம் செலுத்திக் கொள்ளுங்கள்; ஆனால் நாட்டின் ஆளும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்! இதற்கு நீங்கள் உடன்படவில்லையென்றால் நான் கத்ஃபான் கூட்டத்தார் துணையுடன் மதீனா நகர் நோக்கி படையெடுப்பேன்!''

அண்ணலார்; ''அல்லாஹ் உமக்கு அந்தச் சக்தியைத் தரமாட்டான்.''

உரையாடல் இத்துடன் முடிந்தது; ஆமிரும், அர்பத்தும் அந்த இடத்தை விட்டு வெளியே வந்தனர்; ஆமிர், அர்பத்தைக் கடுமையான கோபத்துடன் முறைத்துப் பார்த்து ''நான்தான் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தேனே! நீ ஏன் திட்டப்படி ஒன்றும் செய்யவில்லை?'' என்று உறுமினான்.

அதற்கு அர்பத் ''நான் வாளை வீச முற்படும் பொழுதெல்லாம் ஏதேனும் ஒன்று என் முன் தடையாக வந்து

நின்று விடுகின்றது. ஒரு தடவை ஒரு சுவர் தடையாக வந்து நின்றது. கடைசியாக ஒரு பெரிய ஒட்டகம் வந்து என்னை விழுங்க முயன்ற பொழுதுதான் நான் பயந்து என்னுடைய வாளைஉறையில் போட்டுக் கொண்டேன்!'' என்றான்.

அண்ணலாரைக் கொல்லச் சதி செய்த இவ்விருவரில் ஆமிர் அம்மை நோய்க் கண்டு இறந்தான்; அர்பத் மீது இடி விழுந்ததால் அவனும் இறந்தான். இந்த இரு துரதிருஷ்ட சாலிகளின் முடிவு இப்படி ஏற்பட்ட பிறகு அந்தக் குழுவைச் சார்ந்த மற்றெல்லோரும் இனிய இஸ்லாத்தில் இணைந்து முஸ்லிமாகி விட்டனர்.

—ஆதாரம்; 'ஜாதுல்மஆத்'

என்ன செய்தால் சுவர்க்கம் கிடைக்கும்?

4. அப்துல் கைஸ் தூதுக் குழு:

அஷஜ் அப்துல் கைஸ் பஹ்ரைன் நாட்டைச் சார்ந்தவர்; முதல் தடவையாக 13-அல்லது 14-பேர் கொண்ட குழுவுடன் ஹிஜ்ரீ 5-இல் அண்ணலாரைச் சந்திக்க வந்துள்ளார். ஹிஜ்ரீ 8 அல்லது 9-இல் அண்ணலாரை இவர் சந்திக்க வரும் பொழுது இவருடன் வந்த குழுவில் நாற்பது பேர் இருந்தனர். இவரைச் சார்ந்தோரின் கூட்டம் மிகப் பெருமளவில் இருந்தது.

அஷஜ் வயதில் மிகவும் சிறியவரானாலும் கல்வியறிவு நிறைந்தவராகவும், வீரமிக்கவராகவும் இருந்தார். அண்ணலாரைச் சந்தித்த இவர் ''தங்களைச் சந்திக்க வருவதில் எங்களுக்கு எகிப்து நாட்டு இணை வைப்பவர்கள் மிகப் பெரிய தடங்கலாக உள்ளனர்; இவர்கள் முஹர்ரம் மாதத்தில் தான் போர் புரிவதில்லை. எனவே இந்த மாதத்தில்தான் நாங்கள் உங்களை வந்து சந்திக்க முடியும்! ஆகவே நாங்கள் முஸ்லிம்களான பிறகு என்ன செய்து வந்தால் எங்களுக்கு அல்லாஹ் சுவர்க்கம் தருவான்? என்பதை தயவு செய்து விளக்குங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு அண்ணலார் ''அல்லாஹ்வின் மீது நம்பிக்கை (ஈமான்) கொள்ளுங்கள்! வணக்கத்திற்குரியவன் அவன் ஒருவன்தான் என்பதையும் ஏற்றுக் கொள்ளுங்கள்; தொழுகையை நிலைநிறுத்துங்கள்; ஏழை வரியும்(ஜகாத்) கொடுத்து வாருங்கள்; உங்களின் செல்வத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவிட்டு வாருங்கள்!'' என்று கூறினார்கள், வந்தவர்கள் அந்த விதிகளை ஏற்று முஸ்லிமாகி விட்டார்கள்.

—ஆதாரம்: 'ஸஹீஹ் புகாரீ', 'ஜுர்கானி'

பொய்யர்களின் பரிதாப முடிவு!

5. பனூ ஹனீபா முடிவு!

ஹிஜ்ரீ 9-இல் பனூ ஹனீபா தூதுக் குழு அண்ணலாரைச் சந்திக்க வந்தது: இக்குழுவில் முஸைலமா என்பவனும் இருந்தான்; இவன் பெரிய பொய்யன்; கர்வம் பிடித்தவன்; இக்குழு அண்ணலாரைப் பார்க்க வந்திருந்த பொழுது இவன் இக் குழுவில் இல்லை. எனவே இவனைப் பார்க்க அண்ணலாரே இவனிடம் சென்றார்கள். அண்ணலாருடன் ஹஜ்ரத் ஸாபிதிப்னு கைஸிப்னு ஷமாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். முஸைலமா அண்ணலாரிடம் உறுதிமானம் செய்ய இரண்டு நிபந்தனைகளை விதித்தான். முதல் நிபந்தனை: அண்ணலார் அவனைத் தங்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; இரண்டாம் நிபந்தனை; அண்ணலாருக்குப் பின் அவன்தான் அண்ணலாரின் ஸ்தானம் வகிக்க வேண்டும்!

இதனைக் கேட்ட அண்ணலார் தங்களின் கரத்திலிருந்த பேரீத்த பிரம்பைக் காட்டி ''இந்த பிரம்பை நீ என்னிடம் கேட்டாலும் நான் தரமாட்டேன்; உன்னைப் பற்றி அல்லாஹ் ஏற்கனவே எனக்குக் கனவில் காட்டி விட்டான். உன்னுடைய கேள்விக்கு கைஸ் பதில் சொல்லுவார்'' என்று கூறிவிட்டுத் திரும்பி வந்து விட்டார்கள். இந்தச் சம்பவம்

அண்ணலார் இறுதி ஹஜ்ஜு செய்து திரும்பிய பின் நடந்தது.

முஸைலமா, அஸ்வத் அன்ஸி என்ற இருவரும் தங்களை 'அல்லாஹ்வின் தூதர்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள், இதில் அஸ்வத் அன்ஸி அண்ணலாரின் ஜீவிய காலத்திலேயே கொல்லப்பட்டான்; முஸைலமா, ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களின் ஆட்சியின் பொழுது கொல்லப் பட்டான். — ஆதாரம்: 'இப்னெ அஸீர்'

பெயர் மாற்றம்!

6. தை தூதுக் குழு:

இக்குழுவில் 15-பேர் இருந்தனர்; இதன் தலைவராக ஜைதுல் கைல் என்பவர் இருந்தார். இக்குழு இஸ்லாத்தை மிக சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டது. அண்ணலார் இக்குழுவினரை வாழ்த்தி அக்குழுவின் தலைவருடைய 'ஜைதுல் கைல்' என்ற பெயரை மாற்றி 'ஜைதுல் கைர்' என்ற இஸ்லாமியப் பெயரைச் சூட்டினார்கள்.

—ஆதாரம்; 'உயூனுல் அஸர்'

ஆண்கள் பட்டாடை உடுத்தக் கூடாது!

7. கிந்தா தூதுக் குழு:

எமன் நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு கூட்டத்திற்கு 'கிந்தா' என்று பெயர். ஹிஜ்ரீ 10-இல் வாகனங்களில் சவாரி செய்த வண்ணம் 80—பேர் அண்ணலாரிடம் வந்து முஸ்லிமாயினர். இக்குழுவிற்கு அஷ்கதிப்னு கைஸ் என்பவர் தலைமை வகித்தார். இவர் அணிந்திருந்த ஜுப்பாவின் கழுத்துப் பகுதி பட்டினால் அமைக்கப்பட்டிருந்தது. 'ஆண்கள் பட்டாடை உபயோகிக்கக் கூடாது' என்று அண்ணலார் தெரிவித்ததும் அவர் அந்த ஜுப்பாவைக் கழற்றிக் கிழித்து எறிந்து விட்டார்.

— ஆதாரம்: 'ஜாதுல்மஆத்'

ஆடு-ஒட்டகம் மேய்ப்பவர்களுக்குரிய அடையாளங்கள்!

8. அஷ்அரீ தூதுக் குழு:

'அஷ்அரீ' என்ற பெயருடன் ஒரு பெருங் கூட்டம் எமன் நாட்டில் வாழ்ந்து வந்தது. இக்கூட்டத்தாரைச் சார்ந்த முன்னோர்களில் ஒருவருக்கு உடல் நிறைய முடி இருந்தது. 'முடி உடையவர்' என்ற பொருள் கொண்ட 'அஷ்அரீ' என்ற பட்டத்தால் இவர் பிரபலமானார். இவருடைய வம்சா வழியில் வந்த அனைவருக்கும் 'அஷ்அரீ' என்ற பட்டம் இருந்து வந்தது. உதாரணமாக, ஹஜ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களைக் கூறலாம்.

இந்தக் குழு எமன் நாட்டிலிருந்து அண்ணலாரைப் பார்க்கப் புறப்பட்ட அன்றே அண்ணலார் அக் குழுவின் வருகையைப் பற்றிக் குறிப்பிட்டு ''மிகவும் அன்புள்ளம் கொண்ட ஒரு குழு இஸ்லாத்தில் இணைய எமன் நாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது!'' என்று புகழ்ந்து பாராட்டினார்கள். அக்குழு அண்ணலார் சமூகம் வந்ததும் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

அஷ்அரீ கூட்டத்தினர் பெரும்பாலோர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் குறிப்பிட்ட அண்ணலார் ''ஆடு மேய்ப்பவர்களிடம் அன்புள்ளம் இருக்கும்; ஒட்டகம் மேய்ப்பவர்கள் தங்களையே உயர்ந்தவர்கள் என கூறிக் கொள்வர்'' என்றனர்.

—ஆதாரம்; 'பத்ஹுல் பாரி'

பதுங்கிப் பாய்ந்த முஸ்லிம் புலிகள்!

9. அஜத் தூதுக் குழு:

15-பேர் கொண்ட அஜத் குழு அண்ணலாரைக் காண வந்தது. இக்குழுவில், ஸாதிப்னு அப்துல்லாஹ் அஜதீயும் இருந்தார். அண்ணலார் இக்குழுவினரை இஸ்லாத்தில் இணைய வைத்து ஸாதிப்னு அப்துல்லாஹ்வையே குழுவின்

தலைவராக்கி குர்தேநவாஹ் இணைவைப்பவர்களை எதிர்த்து யுத்தம் புரியுமாறு கட்டளையிட்டார்கள். அதன்படி ஹஜ்ரத் ஸரத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் படையைத் திரட்டிக் கொண்டு இணை வைப்பவர்கள் வாழும் ஜரஷ் நகரை முற்று கையிட்டார்கள். ஒரு மாத காலம் முற்றுகையிட்டும் ஜரஷ் நகரம் வெற்றி கொள்ள முடியாது போனதால் முற்று கையை கை விட்டு விட்டு திரும்பவாரம்பித்தார்கள். இணை வைப்பவர்கள் ‘முஸ்லிம்கள் தோற்றுப் போய் ஓடுகிறார்கள்’ என்று நினைத்துக் கொண்டு முஸ்லிம்களைத் துரத்திக் கொண்டே பின்னால் வந்தார்கள். ‘ஷக்கர்’ என்ற மலையருகே வந்ததும் முஸ்லிம்கள் திடீரென்று பின்புறம் திரும்பி இணை வைப்பவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள்; இதனால் இணை வைப்பவர்கள் படுதோல்வி கண்டார்கள்; முஸ்லிம்கள் பெரு வெற்றியடைந்தார்கள்.

இச்சம்பவத்திற்குச் சில தினங்களுக்கு முன்னதாகவே ஜரஷ் நகர வாசிகள் இருவர் மதீனா நிலையை நேரில் கண்டறிய வந்திருந்தார்கள். இணை வைப்பவர்கள் தோல்வி அடைந்த அன்றே அண்ணலார் மதீனா வந்திருந்த ஜரஷ் நகரவாசிகளிடம் இத்தகவலைத் தெரிவித்து விட்டார்கள். இந்த அதிசயத்தைக் கண்ட அந்த இருவரும் ஜரஷ் நகரம் சென்று அண்ணலாரின் அற்புத அறிவிப்பைப் பற்றி அங்குள்ளவர்களிடம் எடுத்துரைத்தார்கள். இதனால் ஒரு பெருங் கூட்டம் அண்ணலாரைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. —ஆதாரம்: ‘ஜுர்கானி’

வந்த குழு இந்தியர்களா?

10. பனீ ஹாரிஸ் தூதுக் குழு:

ஹிஜ்ரீ 10 ஜமாதுல் அவ்வலில் அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்கள் ஹஜ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி)வை நஜ்ரானுக்கு அனுப்பி அங்குள்ள பனீ ஹாரிஸ் பரம்பரையைச் சார்ந்த மக்களுக்கு சன்மார்க்கத்தில் சேருமாறு மூன்று தினங்கள் வரை அழைப்பு விடுவித்துக்கொண்டிருக்குமாறும், அப்

பொழுதும் அவர்கள் இசைந்து வரவில்லையென்றால் அவர்கள் மீது படையெடுத்து விடுமாறும் சொல்லியனுப்பினார்கள். ஹஜ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி) அவர்கள் நஜ்ரான் சென்று அங்குள்ள மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்ததும் அவர்கள் உடனே அதனை ஏற்றுக் கொண்டார்கள். அடுத்து அவர்கள் அக்கம் பக்கத்து ஊர் மக்களுக்கும் அழைப்பு விடுத்தார்கள். அவர்களும் அதனைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளவே அண்ணலார் சமூகத்தில் இத் தகவலை அனுப்பி வைத்தார்கள். அண்ணலார் மிகவும் மகிழ்ச்சியடைந்து அங்குள்ள மக்களில் முக்கியமானவர்களை ஒரு தூதுக் குழுவாக அமைத்து அழைத்து வருமாறு உத்திர விட்டார்கள்.

ஹஜ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி) அவர்கள் அந்த ஊர் மக்களில் மிக முக்கியமானவர்களாயிருந்த கைஸிப்னு ஹஸீன், யஜீதிப்னு மஹ்ஜல், ஷத்தாதிப்னு அப்துல்லாஹ் ஆகியோரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு அண்ணலார் சமூகத்திற்குவந்து சேர்ந்தார்கள். அண்ணலார், அவர்களைக் கண்டதும் ''யார் இவர்கள்? இவர்களெல்லாம் இந்திய நாட்டைச் சார்ந்தவர்களா?'' என்று கேட்டார்கள். ஹஜ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி) அவர்கள் அத் தூதுக் குழுவினரைப் பற்றி அண்ணலாருக்கு அறிமுகம் செய்து வைத்து ''இந்த மக்கள் எப்பொழுதும் பிறர் மீது வெற்றி கொண்டவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள்!'' என்று கூறினார்கள்.

''நீங்கள் எப்படி பிறர் மீது வெற்றிக் கொள்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள் அண்ணலார் அத் தூதுக் குழுவினரைப் பார்த்து.

''நாங்கள் எப்பொழுதுமே ஒற்றுமையாக இருந்து வருகிறோம்; எமக்குள் எந்த விஷயத்திலும் மாறுபட்ட கொள்கை இருந்ததில்லை! ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்

வதுமில்லை; யார் மீதும் கொடுமையோ, அநீதியோ செய்வதில்லை; சோதனைகள் வரும் பொழுது பொறுமையைக் கைக்கொள்கிறோம்!'' என்றனர் அத்தூதுக் குழுவினர்.

அண்ணலார் கைஸிப்னு ஹஸீன் என்பவரை அவர்களுக்குத் தலைவராக நியமித்தார்கள். ஹஜ்ரத் அம்ருப்னு ஹஜம் (ரலி) அவர்களை அம்மக்களுக்கு இஸ்லாமியபோதனை செய்யவும், அம்மக்களிடமிருந்து ஏழை வரி (ஜக்காத்) வசூலிக்கவும் நியமித்தார்கள். இந்த தூதுக்குழு ஷவ்வால் அல்லது துல்கஅதா மாதத்தில் நஜ்ரான் திரும்பிச் சென்றது. இதற்குப் பிறகு அண்ணலார் நான்கு மாதங்கள் மட்டும் இப்பூவுலகில் வாழ்ந்தார்கள். —ஆதாரம்: 'ஜுர்கானி'

ஹஜ்ரத் காலித் (ரலி) சாதிக்காததை ஹஜ்ரத் அலீ (ரலி) சாதித்தார்கள்!

11. ஹம்தான் தூதுக்குழு;

எமன் நாட்டில் ஹம்தான் என்ற கூட்டம் பெருமளவில் வாழ்ந்து கொண்டிருந்தது; ஹஜ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி) அவர்களை ஹம்தான் மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்குமாறு அண்ணலார் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அம்மக்களுக்குச் சுமார் ஆறு மாத காலம் வரைப் போதனை செய்தும் ஒருவர் கூட அவர்களின் அழைப்பை ஏற்க முன் வரவில்லை! எனவே அண்ணலார் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களை அங்கு அனுப்பி ஹஜ்ரத் காலித் (ரலி) அவர்களை திரும்ப அழைத்துக் கொண்டார்கள். ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்குச் சென்று அழைப்புக் கொடுத்ததில் அந்தமக்கள் அனைவரும் அந்த அழைப்பை ஏற்று முஸ்லிமாகி விட்டார்கள். ஹிஜ்ரீ 8-இல் ஹம்தான் மக்கள் ஒரு தூதுக் குழுவாக அண்ணலாரைக் காண வந்திருந்தார்கள். இக் குழுவில் 120 —பேர் இருந்தனர்.

—ஆதாரம்: 'ஜுர்கானி'

முதலாவதாக வந்த தூதுக்குழு

12. முஸைனா தூதுக் குழு:

அண்ணலார் மதீனாவிற்கு வந்தபின் அவர்களைக் காண முஸைனா கூட்டத்தைச் சார்ந்த 400—பேர் ஒரு குழுவாக வந்தனர். தூதுக் குழுவினராக வந்தவர்களில் முதல் குழுவினர் இவர்கள் தான்! இவர்களின் வேண்டுதல்படி அண்ணலார் இவர்களுக்கு ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் மூலம் உணவிற்காக ஏற்பாடு செய்தார்கள். இக்குழு வந்த ஆண்டு ஹிஜ்ரீ—5. — ஆதாரம்: ஜுர்கானி

13. தூஸ் தூதுக் குழு:

ஹிஜ்ரீ 7-இல் கைபர் யுத்தத்திற்குப் பிறகு தூஸ் கூட்டத்தைச் சார்ந்த 70 அல்லது 80-பேர் கொண்ட தூதுக் குழு அண்ணலாரைச் சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. — ஆதாரம்: ஜுர்கானி

அண்ணலாரைச் சந்திக்க வந்த கிறிஸ்துவக் குழு!

14. நஜ்ரான் கிறிஸ்துவத் தூதுக் குழு:

எமன் நாட்டிலுள்ள ஒரு பெரிய பட்டினத்தின் பெயர் தான் 'நஜ்ரான்' என்பது. இப்பட்டினத்தைச் சார்ந்த 73-க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. பஹ்ரானிப்னு ஜைதிப்னு யஷ்ஜபிப்னு யஅரிப்னு கஹ்தான் என்ற பெயருள்ள மனிதர் முதன் முதலாவதாக இங்கு வந்து குடியேறினார். எனவே அவருடைய 'நஜ்ரான்' என்ற பெயரால் இப்பட்டினம் பிரபலமாயிற்று.

60 பேர் கொண்ட இந்த நஜ்ரான் கிறிஸ்துவத் தூதுக் குழுவில் 14-பேர் மிக முக்கியஸ்தர்களாக இருந்தனர். அப்துல் மஸீஹ் ஆகிப் என்பவர் இக்குழுவின் தலைவராக இருந்தார். ஸய்யத் அய்ஹம் என்பவர் இக் குழுவின் ஆலோசகராகவும், குழுவை வழிநடத்திச் செல்பவராகவும் இருந்தார். அபூ ஹாரிஸிப்னு அல்கா இக் குழுவின் மதத் தலைவராக

(பாதிரி) இருந்தார், அபூ ஹாரிஸ் அறபு நாட்டைச் சார்ந்தவராகவும். பக்ரிப்னு தாயல் கூட்டத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார். இவர் புதிதாக கிறிஸ்துவ மதத்தைத் தழுவியிருந்ததாலும், சிறந்த அறிவாளியாக இருந்ததாலும் உரோமாபுரி அரசு இவருக்கு உரிய மதிப்பும், கவுரவமும் அளித்து வந்தது. ஏராளமான நிலபுலங்களும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தோடு கிறிஸ்துவ மதக் குருமார்களுக்கெல்லாம் இவர் தலைவராகவும் இருந்தார்.

இந்தக் கிறிஸ்துவத் தூதுக் குழு வெகு ஆடம்பரமாக கோலாகலத்துடன் அண்ணலாரைக் காண மதீனா வந்திருந்தது. அண்ணலார், அவர்களை மஸ்ஜிதுந்நபவியிலேயே தங்க வைத்தார்கள். அஸர் தொழுகை நேரம் வந்ததும், முஸ்லிம்கள் அனைவரும் அஸர்தொழுகை தொழுதார்கள். அங்கேயே தாங்களும் தொழ விரும்புவதாக அக்குழுவினர் விரும்பினர்; முஸ்லிம்கள் தடுத்தனர். ஆனால் அண்ணலார் அனுமதியளித்ததால், அவர்கள் கிழக்கு நோக்கித் தங்கள் தொழுகையை நடத்தினார்கள்.

அண்ணலாருடன் நடந்த உரையாடல்!

அண்ணலாருக்கும், இக் குழுவினருக்குமிடையே பல விஷயங்களைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடந்தது இறுதியாக ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் பிறப்பைப் பற்றிய சர்ச்சையெழுந்தது. அண்ணலாருக்கும், கிறிஸ்துவக் குழுவினருக்குமிடையே பின்வருமாறு உரையாடல் நிகழ்ந்தது.

கிறிஸ்துவக் குழு: ''எம்முடைய கிறிஸ்து நாதரை 'இறைவனின் மகன்' என்று நாங்கள் கூறுவதை நீங்கள் மறுக்கிறீர்களே! பிறகு அவர்களுக்கு யார்தான் தந்தை என்று கூறுகிறீர்கள்?''

அண்ணலார்: ''உங்களுக்கெல்லாம் நன்குத் தெரிந்த விஷயம் மகன், தந்தையின் சாயலைப் பொறுத்துத்தானே இருப்பார்?''

கிறிஸ்துவக் குழு: ''ஆம்! இதிலென்ன சந்தேகம்?''

அண்ணலார்: ''அல்லாஹ்வுக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லையென்பதும் உங்களுக்குத் தெரியும். ஹஜ்ரத் ஈஸாவுக்கு மரணமும், அழிவும் இருக்கிறதல்லவா?''

கிறிஸ்துவக் குழு: ''உண்மைதான்! இதிலென்ன சந்தேகம்?''

அண்ணலார்; ''அல்லாஹ்தான் நம்மையெல்லாம் படைத்துப் பரிபாலித்து வருகிறான். அகிலம் அனைத்தையும் பாதுகாத்து வருகிறான்; இரணம் அளித்து வருகிறான்; இவையனைத்தையும் நீங்கள் நம்புகிறீர்களல்லவா? இந்தத் தன்மைகளில் நபி ஈஸாவுக்கு ஏதேனும் ஒன்று இருந்ததுண்டா?''

கிறிஸ்துவக் குழு: இல்லை.

அண்ணலார்: அல்லாஹ்வின் பார்வையை [விட்டு இந்தப் பூமியிலுள்ளனவும், வானங்களிலுள்ளனவும் தப்பமுடிமுடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும்! நபி ஈஸாவுக்கு அல்லாஹ் அறிவிக்காத ஏதேனும் ஒன்று தெரியுமா?''

கிறிஸ்துவக் குழு: தெரியாது.

அண்ணலார்: அல்லாஹ், தான் நாடிய பிரகாரம் நபி ஈஸாவை அவர்களுடைய தாயின் கர்ப்பத்தில் தரிக்கச் செய்தான் என்பதும் உங்களுக்குத் தெரியும்! அல்லாஹ் உண்ணுவதுமில்லை; குடிப்பதுமில்லை! அவனுக்கு எந்தத் தேவையும் இல்லை தானே!

கிறிஸ்துவக் குழு: இதிலென்ன சந்தேகம்?

அண்ணலார். ஹஜ்ரத் மர்யம் மற்ற பெண்களைப் போலவே நபி ஈஸாவைத் தம் வயிற்றிலே பத்து மாதங்கள் சுமந்தார்; மற்ற பெண்களைப் போலவே நபி ஈஸாவைப் பிரசவித்தார்; மற்ற தாய்மார்கள் தங்கள் சிசுக்களுக்கு எத்தகைய உணவுகளை ஊட்டினார்களோ அதே மாதிரி நபி

ஈஸாவையும் அவருடைய சிசுப் பிராயத்திலே ஊட்டி வளர்த்தார். அவர் தேவையுள்ளவராகவும் இருந்தார்.

கிறிஸ்துவக் குழு: ஆம்! ஆம்! உண்மையே தான்!

அண்ணலார்: அப்படியென்றால் ஈஸா நபி எப்படி அல்லாஹ்வாகவோ அல்லது அல்லாஹ்வின் மகனாகவோ முடியும்?

கிறிஸ்துவக் குழுவினர் பதில் கூற முடியாது திகைத்துப் போய் மவுனமாய் உட்கார்ந்து விட்டனர்.

அல்லாஹ் தந்த அறிவிப்பு!

இச் சம்பவத்தின் அடிப்படையில் திருகுர்ஆனில் பின் வரும் வசனம் அருளப்பட்டது:

> ''அல்லாஹ் (எத்தகையோன் என்றால்,) அவனைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறு இல்லை; அவன் நித்திய ஜீவன்; (என்றும்) நிலையானவன், (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை உம்மீது அவன்தான் இறக்கி வைத்தான். (இது)இதற்கு முன்னுள்ள (வேதங்கள் யா)வற்றையும் உறுதிப்படுத்துகின்றது. தவ்றாத்தையும் இஞ்சீலையும் அவனே அருட் செய்தான். இதற்கு முன்னரும் மனிதர்களுக்கு நேரான வழிகாட்டியாக இருந்த (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிக்க கூடிய (மற்ற)வற்றையும் அருள் புரிந்திருக்கிறான். ஆகவே எவர் அல்லாஹ்வுடைய (அவ்)வசனங்களை நிராகரிக்கின்றார்களோ அவர்களுக்கு நிச்சயமாகக் கடினமான வேதனையுண்டு. அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தோனும். (தீயவர்களைப்) பழி வாங்குவோனுமாயிருக்கிறான். நிச்சயமாக வானத்திலோ, பூமியிலோ, (உள்ள) யாதொன்றும் அல்லாஹ்வுக்கு மறைந்ததன்று. அவன் தான் கர்ப்பப் பைகளில் தான் விரும்பியவாறு, (ஆணாகவோ, பெண்ணாகவோ) உங்களை உருவாக்குகின்றான். அவனை

யன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் (யாவரையும்) மிகைத்தோன்; ஞானமுடையோன்.'' — அத்-3.வசனங்கள்: 1 முதல் 6-வரை

இந்த உரையாடலுக்குப் பிறகு அண்ணலார் கிறிஸ்துவத் தூதுக் குழுவினரைக் கண்டு சத்திய சன்மார்க்கமான இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்புத் தந்தார்கள். அதற்கு அவர்கள் ''நாங்கள் ஏற்கனவே நபி ஈஸாவைப் பின்பற்றிய முஸ்லிம்கள்தானே!'' என கூறினர்.

அதற்கு அண்ணலார் ''நீங்கள் எப்படி உங்களை 'முஸ்லிம்கள்' என்று கூறிக்கொள்கிறீர்கள்? ஈஸா நபியை நீங்கள் அல்லாஹ்வின் குமாரர் என்று கூறுகிறீர்கள்! சிலுவையை வணங்குகிறீர்கள்! பன்றி இறைச்சியைச் சாப்பிடுகிறீர்கள்! இவையெல்லாம் முஸ்லிம்களுக்குள்ள செயலல்லவே!'' என்றார்கள்.

அதற்கு அந்தக் கிறிஸ்துவத் தூதுக் குழுவினர் ''நீங்கள் நபி ஈஸா அவர்களை 'அல்லாஹ்வின் அடியார்' என்று கூறுகிறீர்களே! அவர்களைப் போன்ற ஒருவரை உங்களால் இவ்வுலகில் வேறு யாரையேனும் காட்ட முடியுமா?', என கேட்டனர். இது குறித்து அல்லாஹ் திருகுர்ஆனில் பின்வரும் வசனத்தை அருளினான்,

''நிச்சயமாக அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம், ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே! அவன் அவரை மண்ணால் உற்பத்தி செய்து ''(மனிதனாக) ஆகு'' என கூறினான்! உடனே (அவ்வாறு) ஆகிவிட்டது. (நபியே! ஈஸாவைப் பற்றி) உம் இறைவனிடமிருந்து கிடைத்த உண்மை(யான செய்தி) இதுதான்! ஆகவே (இதைப் பற்றிச்) சந்தேகப்படுவோரில் நீரும் (ஒருவராக) ஆகிவிட வேண்டாம். (நபியே) உமக்கு உண்மையான செய்தி கிடைத்த பின்னரும்

இதைப்பற்றி உம்மிடம் எவரும் தர்க்கித்தால் (அவர் களுக்கு நீர் கூறும்; ''வாருங்கள்; நாம் எங்களுடைய மக்களையும், உங்களுடைய மக்களையும், எங்களுடைய மனைவிகளையும், உங்களுடைய மனைவிகளையும், எங் களையும், உங்களையும் அழைத்து (ஒன்று சேர்த்து) வைத்துக் கொண்டு (ஒவ்வொருவரும் தத்தம் கூற்றே உண்மையெனச்) சத்தியம் செய்து, ''(இதற்கு மாறாகக் கூறும்) பொய்யர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டா வதாக!'' எனப் பிரார்த்திப்போம்!'' (என்று கூறும்படி கட்டளையிட்டான். இவ்வாறு அண்ணலார் அவர்கள், அவர்களை அழைத்த சமயத்தில் ஒருவருமே இவ்வாறு சத்தியம் செய்ய முன்வரவில்லை,'')

— அத்-3. வசனங்கள் 59-முதல் 61-வரை

தர்க்கம் செய்தால் ஆபத்து வரும்!

இந்த வசனத்தைத் தொடர்ந்து அண்ணலார் அடுத்து அக்குழுவினருடன் தர்க்கவாதம் செய்யத் தயாரானார்கள், தங்களோடு இமாம் ஹஸன் (ரலி) இமாம் ஹுஸைன் (ரலி), ஹஜ்ரத் பாத்திமா (ரலி), ஹஜ்ரத் அலீ (ரலி) ஆகி யோரடங்கிய தங்கள் குடும்பத்தினரோடு வெளியே வந்தார் கள். அண்ணலாரின் அருள் முகத்தைக் கண்டதும் தூதுக் குழுவினர் வெட்கம் மேலிட்டு முகம் கவிழ்ந்து கொண்ட னர். தங்களிடையே கலந்து ஆலோசனை செய்து முடிவைத் தெரிவிப்பதாக அண்ணலாரிடம் கூறிவிட்டு தனியாகச் சென்று ஆலோசனை செய்தனர். ஸையத் அய்ஹம், ஆகிப், அப்துல் மஸீஹிடம் தனியாகச் சென்று ''இந்த மனிதர் அல்லாஹ்வின் தூதராகத்தான் இருக்க வேண்டும்; எனவே இவரோடு நாம் தர்க்க வாதம் செய்தால் நமக்குப் பேரழிவு தான் ஏற்படும்! இந்த மனிதர் ஒரு மலையை நகரச் சொன்ன னால் அது கண்டிப்பாக நகர்ந்தேவிடும். அவர் நபி ஈஸா வைப் பற்றிச் சொன்ன விஷயங்கள் உண்மையாகத்தானே இருக்கிறது! நீங்கள் அவருடைய அழைப்பை ஏற்க விரும்ப வில்லை என்றால்-உங்கள் மார்க்கத்திலே நீடித்திருக்க விரும்பி

னால் அந்த மனிதரோடு சமாதான உடன்படிக்கை செய்து திரும்பிச் சென்று விடுங்கள்!'' என கூறினார்.

ஸையத் அய்ஹமின் இந்த யோசனையைத் தூதுக்குழு ஏற்றுக் கொண்டு 'ஜிஸ்யா வரி' செலுத்தி வர ஒப்புக் கொண்டது.

அண்ணலார் கூறினார்கள்: ''இவர்கள் தலைமேல் அல்லாஹ்வின் வேதனை நிலை கொண்டிருந்தது. இவர்கள் என்னோடு தர்க்கவாதம்செய்திருப்பார்களேயானால் நிச்சயம் இவர்கள் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றப்பட்டுப் போயிருப்பர்; நெருப்பு மழைபொழிந்து நஜ்ரான் வாசிகள் உருத் தெரியாமல் குலைந்து போயிருப்பர். மரங்களில் ஒரு காக்கைக் குருவிகூட உட்கார்ந்திருக்காது!''

கிறிஸ்துவர்கள் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகள்!

அடுத்த நாள்.

அண்ணலார் நஜ்ரான் கிறிஸ்துவத் தூதுக் குழுவினரோடு ஒரு சமாதான உடன்படிக்கையைத் தயாரித்தார்கள். உடன்படிக்கையில் 7-விதி முறைகள் இருந்தன. அவற்றின் சுருக்கம் வருமாறு;

1. நஜ்ரான் வாசிகள் வருடத்திற்கு 80-ஆயிரம் திர்ஹம்களை இரண்டு தவணையில் கட்டி வரவேண்டும்.

2. நஜ்ரான் வாசிகளை ஒருமாதம் வரைக் கண்காணித்து வர ஒரு முஸ்லிம் தூதுவர் நஜ்ரானில் தங்கியிருப்பார்.

3. எமன் நாட்டில் ஏதேனும் கிளர்ச்சி, புரட்சி, குழப்பம் நடந்தால் அதற்குப் பரிகாரமாக நஜ்ரான் வாசிகள் ஒரு குறிப்பிட்ட தொகையும், 30-குதிரைகளும், 30-ஒட்டகங்களும்

அபராதமாகக் கொடுக்கவேண்டும். இவை பிறகு திரும்ப ஒப்படைக்கப்பட்டு விடும்.

4. நஜ்ரான் வாசிகளின் உயிருக்கும், உடைமைக்கும் அல்லாஹ்வும், முஸ்லிம்களும் பாதுகாப்புத் தருவார்கள்.

5. நஜ்ரான் வாசிகளிடையே ஏதேனும் வழக்கு ஏற்பட்டால் முஸ்லிம்கள் மூலம் நியாயம் வழங்கப்படும்;

6. வட்டி வாங்க யாரேனும் முற்பட்டால் அவரைப் பற்றிய பாதுகாப்புத் தரமாட்டாது.

7. யாரேனும் அநீதி செய்தால் அவனுக்குப் பிணையாக மற்றொருவனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு நஜ்ரான் வாசிகள் தங்கள் நாடு திரும்பினர்.

— ஆதாரம்; ஷர்ஹே மவாஹிப், இஸாபா, ஜாதுல் மஆத்

முஸ்லிமானவருக்குத் தூக்குத் தண்டனை!

15. ஃபுரோதிப்னு அம்ரு ஜுஸாமியின் தூது:

ஃபுரோதிப்னு அம்ரு ஜுஸாமி ஸிரியா நாட்டு அரசனின் நெருங்கிய முக்கியஸ்தராக இருந்தார். அண்ணலார் இவருக்கு இஸ்லாத்தில் இணையுமாறு அழைப்புக் கொடுத்தார்கள். அதனை அவர் ஏற்று முஸ்லிமாகி, அண்ணலாரைக் கண்டு பேசி வருமாறு தம் சார்பில் ஒரு தூதை அனுப்பினார். அவர் முஸ்லிமாகிவிட்ட செய்தி அந்தக் கிறிஸ்துவ அரசுக்குத் தெரிந்ததும் அந்த அரசு அவரைத் தூக்கிவிட்டு ஷஹீதாக்கி விட்டது.

— ஆதாரம்: ஜாதுல் மஆத்

16. ழமாமிப்னு தஃலபாவின் தூது!

ஹிஜ்ரீ 6-இல் பனூ ஸஅத் சார்பில் ழமாமிப்னு தஃலபா மதீனாவந்து அண்ணலாரைப் பார்த்தார். அப்பொழுது அண்ணலார் தம்முடைய தோழர்களுடன் ஒரு திண்டில் சாய்ந்தவாறு மஸ்ஜிதே நபவியில் அமர்ந்திருந்தார்கள். ழமாம் ஒரு நாயகத் தோழரை அணுகி ''இதில் முஹம்மத் என்பவர் யார்?'' என்று கேட்டார். அந்தத் தோழர் அண்ணலாரை அடையாளம் காட்டினார்.

அவர் அண்ணலாரை அணுகி ''நான் உங்களிடம் சில விளக்கங்கள் கேட்க வந்தேன்; நீங்கள் வருத்தப்படாது பதில் கூற வேண்டும்!'' என்றார்.

''எதைப் பற்றி விளக்கம் வேண்டுமோ கேட்கவும்!'' என்றார்கள் அண்ணலார்.

''தாங்கள் மக்கள் அனைவருக்காகவுமே அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டார் ழமாம்.

'ஆம்! அல்லாஹ்வே அதற்குச் சாட்சியாக இருக்கிறான்' என்றார்கள் அண்ணலார்.

''தினம் ஐவேளைத் தொழுவதும், வருடத்தில் ஒரு மாதம் நோன்பு நோற்பதும், செல்வந்தர்களிடமிருந்து 'ஜகாத்' பெற்று ஏழைகளுக்கு வினியோகிப்பதும் அல்லாஹ்வின் கட்டளைதானா?'' என கேட்டார் ழமாம்.

'ஆம்! அதற்கும் அல்லாஹ்தான் சாட்சி!' என்றார்கள் அண்ணலார்.

''நான் உங்கள் மீது விசுவாசம் கொண்டு அல்லாஹ்வின் அத்தனைக் கட்டளைகளையும் ஏற்றுக் கொள்கிறேன்! நான் என்னுடைய கூட்டத்தார் சார்பில் தூதுவனாக வந்துள்

னேன்! நான் கண்டதையும், கேட்டதையும் என் மக்களிடம் எடுத்துச் சொல்வேன்!'' என்று கூறிய ழமாம் தம்முடைய மக்களிடம் சென்று விஷயத்தை விளக்கிக் கூறி 'லாத்தும்' உஸ்ஸாவும் மிகவும் கெட்டவை!' என்றார்.

''அப்படிக் கூறாதீர்! அவை மிகச் சக்தி வாய்ந்த தெய்வங்கள்! அவற்றிற்குக் கோபம் வந்தால் உமக்குப் பைத்தியம் பிடித்து விடும்! அல்லது பெரும் வியாதி பீடித்துக் கொள்ளும்!'' என்றனர் அந்த மக்கள்.

''அந்தோ பரிதாபம்! என்னே உங்கள் மதியீனம்! அந்த லாத்தும், உஸ்ஸாவும் உங்களுக்கு எவ்வித இலாபமோ, நஷ்டமோ தரச் சக்தியற்றவை! நான் கண்டு வந்த அல்லாஹ்வின் தூதர் உண்மையானவர்கள்; அவர்களின் மார்க்கமும் உண்மையானது! அவர்களை நாம் பின்பற்றினால்தான் நமக்கு விமோசனம் உண்டு!'' என்று அழுத்தமாகக் கூறினார் ழமாம். அவருடைய கூட்டத்தினர் ஒருவர் கூட பாக்கியில்லாது எல்லோரும் முஸ்லிமாகி விட்டனர்.

—ஆதாரம்-, 'ஃபத்ஹுல் பாரி', 'ஷர்ஹே மவாஹிப்'

பழைய போர்வையில் வந்த அண்ணலார்!

17, தாரிகிப்னு அப்துல்லாஹ் முஹாரபீயின் தூதுக்குழு

தாரிகிப்னு அப்துல்லாஹ் முஹாரபீ கூறுகிறார்: ''தாங்கள் ஒரு கூட்டமாக மதீனாவிற்குப் போய்ப் பேரீத்தம் பழங்கள் வாங்கச் சென்றிருந்தோம்; அங்கு ஒரு தோட்டத்தின் பக்கம் போய்க் கொண்டிருக்கும் பொழுது ஒருவர் இரண்டு பழைய போர்வையைப் போர்த்திக்கொண்டு எம் முன்னால் வந்து, எமக்கு ஸலாம் சொல்லி 'எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டார், 'ஜபத்' என்ற இடத்திலிருந்து வருகிறோம். மதீனாவில் பேரீத்தம் பழங்களை வாங்கிச்செல்ல வந்தோம்! என கூறினோம். அவர் எம்மிடமிருந்த ஒரு

சிவப்பு ஒட்டகத்தைப் பார்த்து 'பேரீத்தம் பழங்களைப் பெற்றுக் கொண்டு இதனைத் தந்துவிட முடியுமா?' என்று கேட்டார். நாங்கள் அதற்குச் சம்மதித்தோம். அவர் ஒட்ட கத்தை ஓட்டிச் சென்று விட்டார். அவர் போன பிறகு தான் 'முன்பின் தெரியாத ஒருவரை நம்பி எப்படி ஒட்ட கத்தை அவரிடம் ஒப்படைக்கலாம்?' என்ற சர்ச்சை எங் களிடையே எழுந்தது.

"எங்களிடையே சர்ச்சை வலுத்தது; எங்கள் கூட்டத் திலிருந்த ஒரு பெண் 'வந்தவர் நல்ல நாணயஸ்தராகத் தோன்றுகிறார்; அவருக்காக நான் பொறுப்பேற்கிறேன்!' என்றாள். அவ்வாறு அவள் கூறி முடிப்பதற்குள் ஒருவர் பேரீத்தம் பழங்களோடு எங்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதர் உங்களிடமிருந்து பெற்றுச் சென்ற ஒட்டகத்தின் விலையாக இந்தப் பழங்களை அனுப்பி வைத்தார்கள்!' என் றார். அப்பொதுதான் எமக்குத் தெரிந்தது பழைய போர் வையைப் போர்த்திக் கொண்டு வந்தவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று. அடுத்த நாள் நாங்களனைவரும் அண்ணலா ரைச் சந்தித்து இஸ்லாத்தில் இணைந்தோம்."

—ஆதாரம்; 'ஜாதுல் மஆத்

தருமப் பொருள்கள் நபிக்கு வேண்டாம்!

18. துஜீப் தூதுக் குழு:

எமன் நாட்டிலுள்ள 'குந்தா' என்ற கூட்டத்தாரின் ஒரு கிளையினரின் பெயர்தான் துஜீப். 13—பேர்களைக் கொண்ட இந்தத் தூதுக் குழு தருமப் பொருள்களுடன் அண்ணலாரைக் காண வந்தது. அண்ணலார் அந்தத் தருமப் பொருள்களை வாங்க மறுத்து "இதனைத் திருப்பிக் கொண்டு போய் உங்கள் பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு விநியோ கித்து விடுங்கள்!" என்றார்கள்.

''அப்படிக் கொடுத்தும் மீதப்பட்டதைத்தான் தங்கள் சமூகத்தில் கொண்டு வரப்பட்டது!'' என்றனர் அந்தக் குழுவினர்.

''இத்தகைய ஒரு நோக்கத்துடன் இங்கு வந்த முதல் குழு இதுதான்!'' என்றார்கள் ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள்.

''யாருடைய நெஞ்சங்களை விஸ்வாசம் செய்து கொள்ள அல்லாஹ் திறந்துவிடுகின்றானோ அவர்களுக்கெல்லாம் இந்தப் பாக்கியம் கிடைத்து விடுகிறது!'' என்று கூறினார்கள் அண்ணலார்.

துஜீப் தூதுக் குழுவினர் அண்ணலாரிடம் பல சந்தேகங்களுக்குத் தெளிவு பெற்றுக் கொண்டனர். சில நாட்கள் அண்ணலாரிடமே தங்கியிருந்து பிறகு தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்று அங்குள்ள மற்ற மக்களையும் இஸ்லாத்தில் இணையச் செய்தனர்.

—ஆதாரம்: 'உயூனுல் அஸர்'

இஸ்லாத்தில் அடியான் எஜமான் வேற்றுமை இல்லை!

19. ஹுஜைம் தூதுக் குழு

ஹுஜைம் தூதுக் குழுவினர் அண்ணலாரைச் சந்திக்க வந்த பொழுது அண்ணலார் மஸ்ஜிதே நபவியில் ஒருவருடைய 'ஜனாஸா' தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். வந்த குழுவினர் தனியாக ஓரிடத்தில் போய் அமர்ந்துக் கொண்டார்கள். அண்ணலார் தொழுகையை முடித்துக் கொண்டு அந்தக் குழுவினரை அழைத்து 'நீங்களனைவரும் முஸ்லிம்கள் தானே?' என்று கேட்டார்கள். 'ஆம்' என்றனர் அந்தக் குழுவினர். ''பின் ஏன் ஒரு முஸ்லிம் சகோதரருடைய 'ஜனாஸா' தொழுகையில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டார்கள். ''தங்களின் கரத்தில்

நாங்கள் உறுதிமானம் செய்யாததால் 'ஜனாஸா' தொழுகை எம் மீது கடமை இல்லை என்று நினைத்தோம்!'' என்றனர். பின்னர் அண்ணலார் அவர்களனைவரிடமும் உறுதிமானம் ('பைஅத்') செய்தார்கள். அக் குழுவிலிருந்த சிறுவரை அக்குழுவின் தலைவராக நியமித்தார்கள். ''அல்லாஹ்வின் தூதரே! இவர் வயதில் மிகவும் சிறியவர்; மேலும் இவர் எம்முடைய பணியாளராயிருக்கிறாரே!'' என்றனர் அக்குழு வினர். 'இஸ்லாத்தில் பணியாளர்—எஜமான் என்ற வித்தியாசமில்லை' என்று கூறிய அண்ணலார் அச் சிறுவருக்காக 'துஆ' செய்தார்கள். இப்பால் அச் சிறுவர் பெரும் கல்விமானாகவும், சிறந்த தலைவராகவும் விளங்கினார். பிறகு ஹுஜைம் கூட்டத்தினர் அனைவருமே முஸ்லிமாகி விட்டார்கள்.

—ஆதாரம்; ஜாதுல் மஆத்

இவையன்றி பனூ ஃபஜாரா தூதுக் குழு, பனூ அஸத் தூதுக் குழு, பஹ்ர்ஆ தூதுக் குழு, குஜ்ரா தூதுக் குழு, பல்லி தூதுக் குழு, பனூ முர்ரஹ் தூதுக் குழு, கவுலான் தூதுக் குழு, மஹாரிப் தூதுக் குழு, ஸுதஆ தூதுக் குழு, கஸ்ஸான் தூதுக் குழு,ஸலாமான் தூதுக் குழு, பனூ அபஸ் தூதுக் குழு, காமித் தூதுக் குழு, அஜூத் தூதுக் குழு, பனூ முன்தபிக் தூதுக் குழு என்று பல பெயருடன் பல தூதுக் குழுவினர் அண்ணலாரைக் கண்டு உறுதிமானம் செய்து முஸ்லிமாயினர்.

கனவிற்குரிய விளக்கம் என்ன?

20. நகா தூதுக் குழு:

எமன் நாட்டில் 'நகா' என்ற பெயர் கொண்ட ஒரு கூட்டம் இருந்தது. இக் கூட்டத்தைச் சார்ந்த 200—பேர் ஹிஜ்ரீ 11—இல் முஹர்ரம் மாதத்தில் அண்ணலாரைக் காண வந்திருந்தனர். இதில் ஜராரத்திப்னு அம்ருவும் இருந்தார்.

அவர் ஒரு கனவைக் கண்டார். ‘‘அவருக்கும், அவர் மகனுக்குமிடையே பூமியிலிருந்து ஒரு நெருப்பு வெளிப்பட்டு ‘உன்னையும், உன்னுடைய குடும்பத்தினரையும், உன்னுடைய பொருட்களையும் உண்ணப்போகிறேன்!’ என்று கூறிய தாகவும், அதற்குரிய விளக்கம் என்ன?’’ என்றும் அவர் அண்ணலாரிடம் கேட்டார். அதற்கு அண்ணலார் ‘‘ஒரு குழப்பமான காலம் வரும்; தீயவர்கள் தங்களை நல்லவர்கள் என்று கூறிக் கொண்டு தங்களுடைய இமாம்களையும், கலீபாக்களையும் கொலை செய்வார்கள்; உம்முடைய மகனுக்கு முன்னதாக நீர் இறந்து விட்டால் உம் மகன் அந்தக் கொலையில் பங்கு பெறலாம்: நீர் உயிரோடு இருந்து உன் மகன் இறந்துவிட்டால், நீர் அந்தக் கொலையில் பங்கு பெறலாம்’’ என்றார்கள்.

ஜராரத்திப்னு அம்ரு அந்தக் குழப்பமான காலத்தில் தாம் இல்லாதிருக்க ‘துஆ’ செய்யுமாறு அண்ணலாரிடம் கேட்டுக் கொண்டார். அண்ணலாரும் அப்படியே ‘துஆ’ செய்ய அவர் இறந்த பின் ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் ஆட்சியின் பொழுது குழப்பம் ஏற்பட்டு ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் ஷஹீதானார்கள். இந்தக் கொலைகாரக் கும்பலில் ஜராரத்திப்னு அம்ருவின் மகனும் ஒருவனாக இருந்தான்.

—ஆதாரம்: ‘ஜுர்கானி’



2. அண்ணல் நபிய... அற்புதங்கள்!

"மறுமை நெருங்கி விட்டது; (அதற்கு அறிகுறியாக) சந்திரனும் பிளந்து விட்டது. எனினும், அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்ட போதிலும் (அதனைப்) புறக்கணித்து, 'இது தொடர்ந்த சூனியந்தான்' என்று கூறுகின்றனர். அன்றி அதனைப் பொய்யாக்கித் தங்கள் (சரீர) இச்சைகளையே பின்பற்றுகின்றனர். (இவ்வாறு அவர்கள் அதனைப் புறக்கணித்த போதிலும், வரவேண்டிய) ஒவ்வொரு விஷயமும் (அதன் காலத்தில் வந்து) உறுதிப்பட்டு விடும். (இவர்களுக்குப்) போதுமான படிப்பினை தரக் கூடிய பல விஷயங்கள் (இதற்கு முன்னரும்) நிச்சயமாக அவர்களிடம் வந்தேயிருக்கின்றன. (அவை அவர்களுக்குப்) பூரண ஞானம் அளிக்கக் கூடியவைதாம்! எனினும் (அவற்றைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்தது (இவர்களுக்கு) யாதொரு பயனுமளிக்கவில்லை."

—அல்குர்ஆன், அத்தியாயம்—54, வசனங்கள்; 1 முதல் 5 வரை

"என்னைப் பின்பற்றியவர்கள் மற்ற நபிமார்களைப் பின்பற்றியவர்களை விட மறுமை நாளில் அதிகமிருப்பர்: மேலும் சுவர்க்கத்தின் கதவைத் தட்டுவோரில் நானே முந்தியவன். சுவர்க்கத்தில் புகுந்த ஒருவன் பாக்கியம் பெறுகிறான். எந்தத் தொல்லையும் அடையமாட்டான். அவனின் ஆடைகளும் பழமையாகாது; அவனுடைய வாலிபமும் அழியாது."

—அண்ணல் நபி (ஸல்-அம்)

"இம்மையைப் பற்றிய சிந்தனை ஹிருதயத்தில் இருளை உண்டாக்கும்; மறுமையைப் பற்றிய சிந்தனை உள்ளத்தில் ஒளியை உண்டாக்கும். உலக மாயையை

விட்டவரை இறைவன் நேசிக்கிறான்; பாவத்தை விட்ட வரை அமரர்கள் நேசிக்கிறார்கள்.''

— ஹஜ்ரத் உதுமான் (ரலி)

''நேரிய விழைவு தன்னை
நிர்மல இறைய வன்பால்
ஆறாத நிலையில் கொண்ட
அற்புதம் பெரிதே நெஞ்சே!''

— மவுலவி பாஜில் ஜி. எம். ஸிராஜ் பாகவி.

அல்லாஹ் தன் அருளால் தன்னுடைய தூதர்கள் மூலம் தன்னுடைய சக்தியை வெளிப்படுத்துகின்றான். அந்தச் சக்திகள் மிக்வும் அற்புதமான ரூபத்தில் வெளிப்படும். ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் கைத் தடியைப் பாம்பாக்கிக் காட்டியதும், ஹஜ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் முன்னால் நெருப்பை பூங்காவாக ஆக்கியதும், ஹஜ்ரத் யூனுஸ் (அலை) அவர்களை மீன் வயிற்றுக்குள் நாற்பது நாள் வைத்து வெளிப்படுத்தியதும், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மூலம் செத்தவர்களை உயிர்ப் பெற்றெழச் செய்ததும் அவனுடைய வல்லமையைக் காட்டக் கூடியதாகவே அமைந்துள்ளனவே தவிர அந்தத் தூதர்களின் சுய முயற்சியினாலல்ல. அல்லாஹ்வின் தூதர்களைக் கொண்டு வெளிப்படும் அற்புதங்களுக்கு 'முஃஜிஸா' என்றும், அவனுடைய நேசர்களைக் கொண்டு ஏற்படும் அற்புதங்களுக்கு 'காராமத்' என்றும் கூறுவர்.

அண்ணலாரைக் கொண்டு வெளிப் பட்ட ஆயிரம் அற்புதங்கள்!

அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களைக் கொண்டு வெளிப் பட்ட அற்புதங்கள் ஆயிரம் என்று குறிப்பிடுகின்றார்கள் இமாம் பைஹகீ (ரஹ்) அவர்கள். இமாம் நூதி (ரஹ்) அவர்கள் ஆயிரத்து இருநூறு என்று குறிப்பிட்டுள்ளார்கள். மற்றும் சில பெரியார்கள் இந்த எண்ணிக்கையை மூவாயிரம் வரைக் கொண்டு செல்கின்றனர். ஹஜ்ரத் ஷேக் ஜலாலுத்

தீன் ஸுயூத்தி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'கஸாயிலே குப்ரா' என்ற நூலில் ஆயிரத்திற்குரிய ஆதாரங்களைக்காட்டு கிறார்கள். அண்ணலாருடைய ஒவ்வொரு சொல்லும், செய லும் அற்புதம் நிறைந்ததாகவே இருந்தது என்பதே உண் மையான கணிப்பாகும்.

அண்ணலார் மக்காவை விட்டு மதீனாவிற்குப் பிரயாணப் பட்ட சம்பவத்திற்குச் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் இணை வைப்பவர்களின் வற்புறுத்தலின்படி அல்லாஹ்வின் உதவியைக் கொண்டு அண்ணலார் பதினான்காம் நாள்பிறை யைப் பிளந்து காட்டினார்கள்; மற்றொரு தடவை கைப ருக்கு அருகாமையிலிருக்கும் பொழுது அண்ணலார் 'அஸர்' தொழுகை தொழாத நிலையில் அஸ்தமித்து விட்ட சூரியனை அல்லாஹ்வின் உதவியால் மீண்டும் மேலெழச் செய்து அற்பு தத்தை வெளிப்படுத்தினார்கள். மற்றொரு தடவை அஸ்த மிக்கப் போகும் சூரியனை ஒரு பிரயாணக் கூட்டம் திரும்பி வரும் வரை நிறுத்திக் காட்டினார்கள். இவை மூன்றும் சந் திர, சூரியன் சம்பந்தப்பட்டவை. ஏற்கனவே இவை விவ ரிக்கப்பட்டுள்ளன. அடுத்து அண்ணலாரின் விண்ணுலக யாத் திரை. இந்த அற்புதம் இன்றளவும் உலக மக்களின் திகைப்பை அதிகப்படுத்திக் கொண்டே வருகிறது. 'ராக்கட்' மூலம் மனிதன் சந்திர மண்டலத்தை அடைந்த பிறகுதான் உலகின் பெரும்பாலான மக்கள் அண்ணலாரின் விண்ணுல கப் பயணத்தை நம்பத் தொடங்கினர். இது பற்றியும் ஏற் கனவே விளக்கப்பட்டுள்ளது.

மனிதர்களில் ஆறுவகைப் பிரிவினர்!

அண்ணலார் காலத்து மக்களை ஆறு வகையாகப் பிரிக் கலாம்:

முதல் பிரிவினர்-மஜூஸிகள்!

முதல் வகைப் பிரிவினர் நெருப்பை வணங்கக் கூடிய 'மஜூஸிகள்'. இவர்கள் ஈரானிலிருந்து குராஸான், துருக்

கிஸ்தான் வரைப் பரந்து வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களை 'கிஸ்ரா' என்ற அரசன் ஆண்டு வந்தான். இந்தப் பிரிவினர் 'எஜ்தான்', 'அஹர்மன்' என்ற இரண்டு தெய்வங்களை வணங்கி வந்தனர். நெருப்பை வைத்துப் பூஜித்து வந்தனர். இவர்கள் இறந்து போன மிருகங்களையும் புசித்து வந்தனர். மகளையும், சகோதரியையும் மணந்து கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தனர். தந்தையுடைய சகோதரியையும் தாயுடைய சகோதரியையும் கூட மணந்து வந்தனர். இஸ்லாத்தில் இத்தகைய திருமணங்களுக்குத் தடை உண்டு.

இரண்டாம் பிரிவினர்-யூதர்கள்!

இவர்கள் எமன் நாட்டிலும், கைபரிலும், மதீனா நகரின் சுற்றுப் புறத்திலும் வாழ்ந்து வந்தனர். பிடிவாதக்காரர்களாகவும், கர்வம் பிடித்தவர்களாகவும் இவர்கள் இருந்தனர். 'தவ்ராத்' வேதத்தையுடையவர்களாயிருந்தாலும் நபிமார்களைக் கொல்வதும், மதக் கிரந்தங்களில் 'தில்லுமுல்லு' வேலை செய்வதும் இவர்களின் வாடிக்கையாக இருந்தது. இலஞ்சம் பெற்று மார்க்கச் சட்டங்களை மாற்றி வந்தனர். 'யூதர்கள் சபிக்கப்பட்டவர்கள்' என்று அல்லாஹ் திருகுர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

மூன்றாம் பிரிவினர்-கிறிஸ்துவர்கள்!

கிறிஸ்துவர்கள் அச்சமயம் ஸிரியாவிலும், இராக்கிலும், உரோமாபுரியிலும் அதிகம் வாழ்ந்து வந்தனர். 'கைஸர்' என்ற பெயர் கொண்ட அரசர் இவர்களை ஆண்டு வந்தான். நபி ஈஸா (அலை) அவர்கள், 'அல்லாஹ்வின் மகன்' என்பது இவர்களின் கொள்கை. தந்தை, மகன், ஆத்மா என்ற 'திரியேகத்துவம்'தான் இவர்களின் அடிப்படை இலட்சியம்! ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள் என்பது இவர்களின் வாதம். ஆனால் இஸ்லாம் இவர்களின் ஒருகொள்கையையும் ஏற்கவில்லை. 'கிறிஸ்துவர்கள் வழி தவறியவர்கள்' என்று அல்லாஹ் திருகுர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

நான்காம் பிரிவினர்-இணை வைக்கும் 'முஷ்ரிக்'குகள்!

அல்லாஹ்வையும் வணங்கிக்கொண்டு, அவனுக்கு இணையாக கல்லாலும், மண்ணாலும், உலோகத்தாலும் ஏதேனும் ஓர் உருவத்தை வடித்துக் கொண்டு அதனையும் வணங்குவர். இவர்களை 'முஷிரிக்குகள்-இணை வைப்பவர்கள்' எனக்கூறப் படும். இவர்கள் இந்தியாவிலும், மேற்காசியத் தீவுகளான அறபு நாடுகளிலும் அதிகம் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வணங்கும் விக்கிரகங்களின் எண்ணிக்கை அளவிட்டுக் கூற முடியாத அளவிலுள்ளன. இவர்களின் எண்ணிக்கை அறபு நாடுகளிலிருந்து அறவே அகற்றப்பட்டு விட்டதென்றாலும். இந்தியாவில் மேலும், மேலும் பெருகிக் கொண்டே இருக் கிறது. நாள்தோறும் புதுப்புது விக்கிரகங்களை உற்பத்தி செய்து வணங்கி வருகின்றனர். அல்லாஹ்வைவிட தங்கள் கரங்களால் வடித்துக் கொண்ட விக்கிரகங்களுக்கு அதிகம் சக்தி உள்ளது என்று நம்பக்கூடியவர்கள் இவர்களில் அதிகம் உண்டு. 'இணை வைப்பவர்களுக்கு நிரந்தரமான தங்குமிடம் நரகந்தான்' என்று அல்லாஹ் திரு குர்ஆனில் குறிப் பிட்டுள்ளான்.

ஐந்தாம் பிரிவினர்-ஆன்மீக உலகை நம்பக் கூடியவர்கள்!

இந்தப் பிரிவினர் ஆன்மீக உலகோடு தொடர்பு கொண்டு செயல்படுபவர். நட்சத்திரங்களை பூஜித்து வருப வர்: ஹஜ்ரத் இப்றாஹீம் நபி (அலை) அவர்களின் காலத்தில் இந்தப் பிரிவு மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இராக் நாட்டிலும், ஹர்ரானிலும் இப் பிரிவினர் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இன்று இப்பிரிவினர் விரல் விட்டெண் ணக் கூடிய அளவில்தான் உள்ளனர்.

ஆறாம் பிரிவினர்-நாஸ்திகர்கள்!

இப்பிரிவினரின் எண்ணிக்கை உலகில் அன்றும் மிகவும் குறைவாக இருந்தது; இன்றும் மிகவும் குறைவாகவே

இருந்து வருகிறது. இப்பிரிவினர் அல்லாஹ்வையோ, அவனுடைய சக்தியையோ நம்புவதில்லை; மண்ணறை வாழ்வு, மறு உலக வாழ்வு, சுவர்க்கம், நரகம், இறுதித் தீர்ப்பு நாள் எதையும் இவர்கள் நம்புவதில்லை; 'எல்லாம் இயற்கையாகவே நடைபெறுகின்றன' என்பது இவர்களின் வாதம். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் காலத்தில் இப்பிரிவினரின் செயல்பாடு மிக மும்முரமாக இருந்தது. மறுமையில் இவர்களுக்கு சுவர்க்கத்தின் சுகமுமில்லை: நகரத்தின் வேதனையுமில்லை; இரண்டிற்குமிடையில் இப்பிரிவினர்ஒதுக்கப்படுவர் என்பது பெரியார்களின் கணிப்பு.

உம்பி நபியின் அபூர்வ வாழ்க்கை முறை!

அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்கள் இப்பூவுலகில் இஸ்லாமிய ஜோதியைப் பரத்த முயன்ற பொழுது இந்த ஆறு பிரிவினருடனும் எதிர் நீச்சலடிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதிகமாக எதிர்த்துப் போராடியவர்கள் இணை வைக்கும் முஷ்ரிக்குகள்தான். இத்தகையப் பிரிவினர்களோடு மோதி, இஸ்லாத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காகத்தான் அல்லாஹ், அண்ணலார் மூலம் அவ்வப்பொழுது சில அற்புதங்களை வெளிப்படுத்திக் கொண்டு வந்தான்.

அண்ணலார் எழுதப் படிக்கத் தெரியாத 'உம்மி' நபியாக இருந்தார்கள்; பொருள் வசதியற்ற ஏழையாகவும் இருந்தார்கள். அப்படியிருந்தும் பெரும் பெரும் சாம்ராஜ்யங்களையும், சக்திகளையும் எதிர்த்து வெற்றி கண்டார்கள். அண்ணலாரின் வாழ்க்கையே ஓர் அற்புதம் என்று சொல்லலாம். ஒரே சமயத்தில் அவர்கள் இல்லறத்திலும் வாழ்ந்தார்கள்; துறவறத்திலும் வாழ்ந்தார்கள். செல்வச் சீமானாக இருந்த நேரத்திலே அவர்கள் பரம ஏழையாகவும் இருந்தார்கள். போர்த் தளபதியாக இருந்து படைகளை நடத்திச் செல்லும் அதே நேரத்திலே பேரா வீரராகவும் செயல்பட்டிருக்

கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தலைவராக விளங்கிய அவர்கள் ஒரு சாதாரண மனிதனின் ஊழியராகவும் தொண்டாற்றியுள்ளார்கள். இத்தகைய எதிரும் புதிருமான இரண்டு நிலைகளையும் ஏக காலத்திலே இயக்கிக்கொண்டிருந்தார்கள். இவையெல்லாம் அல்லாஹ்வினால் கிடைத்த உதவியைக்கொண்டு அண்ணலாரால் வெளிப்பட்ட அற்புதங்கள் என்றே சொல்லலாம்.

அமரத்துவம் பெற்ற அற்புத மறை திருகுர்ஆன்

அற்புதங்கள் பல அண்ணலாரின் ஜீவிய காலத்திலே ஏற்பட்டன என்றாலும், அவர்களின் மறைவிற்குப் பிறகு உலக முடிவு வரை அவர்களைக் கொண்டு ஏற்பட்ட இரு அற்புதங்கள் நீடித்து நிலைத்து நின்று விட்டன. ஒன்று: அல்லாஹ் அருளிய திருகுர்ஆன்; மற்றொன்று அண்ணலார் தம்முடைய வாழ்க்கையில் சாதித்துக் காட்டிய முன் மாதிரிகள்! திருகுர்ஆனுடைய அற்புதத்திற்கு எது ஒன்றையும் ஈடு காட்ட முடியாது; எப்படி அல்லாஹ்வைப் பற்றி விளக்க எது ஒன்றையும் உதாரணமாகவோ, உவமையாகவோ, எடுத்துக்காட்டாகவோ கூற முடியாதோ, அதே நிலைதான் உள்ளது அவன் அருளிய திருகுர்ஆனுக்கும்! நூறு பக்கங்களில் விவரிக்க வேண்டிய ஒரு சம்பவத்தை ஒரே வாக்கியத்தில் புதைத்துக் காட்டப்பட்டிருப்பது ஒரு பெரிய அற்புதம்தான்! முக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய அதன் கருத்துக்கள் மாபெரும் சக்தி கொண்டவை! அதன் வசனங்களை இராகமாக இழுத்து ஓதினாலும், சரி; சாதாரண நடையாக ஓதினாலும் சரி; ஆத்திரத்துடன் ஓதினாலும் சரி; அமைதியான குரலில் ஓதினாலும் சரி! எல்லாவற்றையும் அவை ஏந்திக் கொள்கின்றன. அவற்றின் அமைப்பிலுள்ள எதுகை, மோனை, தளை ஆகிய எல்லாமே ஒன்று சேர்ந்து திருகுர்ஆனின் அற்புதத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. எனவேதான் திருகுர்ஆனை 'அமரத்துவம் பெற்ற அற்புதம்' என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

எல்லாவற்றிற்கும் ஓர் எடுத்துக்காட்டு அண்ணலார்!

இனி அண்ணலாரின் வாழ்க்கை முறையின் அற்புதத் தைப் பரிசீலிப்போம். சுருங்கக் கூறுமிடத்து அல்லாஹ் விற்குப் பிடித்த ஓர் அடியான் எப்படி வாழவேண்டும்? என் பதற்கும், ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தால் அவன் மனிதனாக கவே இருக்க முடியும்? என்பதற்கும், சர்ச்சைகள் மிகுந்த உலகில் சலனமற்ற முறையில் எப்படி வாழவேண்டும்? என்ப தற்கும், ஒரு மனிதனின் எத்தகையச் செயல்கள் வணக்கமாக மாறிவிடுகின்றன? என்ற முறை வகுப்பதற்கும், படைப்பு களுக்கு அஞ்சாது படைத்தவனுக்கு எப்படி அஞ்சவேண்டும்? என்பதற்கும் அண்ணலாரின் வாழ்க்கை முறையை ஓர் அழ கிய முன் மாதிரியாக நாம் எடுத்துக் கொள்ளலாம். எனவே தான் அவர்களின் வாழ்க்கை முறையும் ஓர் அற்புதமாகவே— எவராலும் உலகில் அப்படி வாழ முடியாததாகவே இருந்தது.

அற்புதங்கள் இரண்டு வகை!

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தந்தையில்லாது பிறந்த அற்புதத்தையும் சேர்த்து அவர்களால் 27—அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன: அவர்களின் தோழர்களை (ஹவாரீன்களை)க் கொண்டு 20—அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன, இந்த அற்புதங் கள் சிலவற்றிற்குச் சரியான ஆதாரமே இல்லாது போய் விட்டது. அற்புதங்கள் இரண்டு வகைப்படுகின்றன. ஒன்று அறிவாளிகள் உணர்ந்து கொள்ளக் கூடிய அற்புதம்; மற் றொன்று; சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் அற்புதம். உதாரணமாக; திருகுர்ஆனிலுள்ள அற்புதத்தை ஓர் அறி வாளியால்தான் விளங்கிக் கொள்ள முடியும். சந்திரனின் பிளப்பு, சூரியனின் தேக்கம் இவை போன்ற அற்புதங்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளலாம். இதில், அறிவாளி காணும் அற்புதத்தைத்தான் உயர்ந்ததாக எடுத்துக் கொள்ளவேண்டும்! அண்ணலாரின் வான் பிரயாண அற்

புதத்தை அறிவாளிகள் ஏற்றுக் கொள்வதைப் போல அவ் வளவு விரைவில் சாதாரணப் பாமர மக்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து குதர்க்கம் பேசுவார்கள்.

அல்லாஹ்வின் அருளால்தான் அற்புதங்கள் நிகழ்கின்றன!

அண்ணலார் தங்களின் விரல்களால் ஜாடை செய்து சந்திரனைப் பிளந்து காட்டியதும், விரல்களின் ஜாடையால் நீர் ஊற்று வெளிப்பட்டு, அந்த நீரைக் கொண்டு 1500— நாயகத் தோழர்கள், அவர்களின் வாகனங்கள் தங்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதும், குறைந்த அளவிலிருந்த உணவைக் கொண்டு ஒரு படையே உண்டுக் களித்ததும். அண்ணலாரின் அழைப்பை ஏற்று மரங் கள் அவர்களருகில் நெருங்கி வந்ததும், மரங்களும், பாறை களும் அண்ணலாருக்குச் சலாம் சொன்னதும், விஷமிடப் பட்ட ஆட்டிறைச்சியை அண்ணலார் முன் உண்ண வைக்கப் பட்டபோது 'என்னில் விஷம் கலக்கப்பட்டிருப்பதால் என்னை உண்ணாதீர்கள்!' என்று இறைச்சி சொன்னதும் ஆக இத்த கைய அற்புதங்களெல்லாம் 'அண்ணலார், அல்லாஹ்வின் தூதர்தாம்!' என்பதை மெய்படுத்துவதற்காக, பாமரர் களுக்கு உணர்த்தவேதான்! ஆனால் இத்தகைய அற்புதங்க ளெல்லாம் அண்ணலார் நடத்தவில்லை; அல்லாஹ்வின் அரு ளால்தான் இவை அண்ணலார் மூலம் வெளிப்படுகின்றன என்றே அறிவாளிகள் கூறுவர்.

கண் கட்டி வித்தை அற்புதமாகுமா?

கண் கட்டி வித்தை, 'மெஸ்மெரிஸம்', 'மேஜிக்' என்ற பெயரால் சாதாரண மக்கள் சில அற்புதங்களை நிகழ்த் துவர். மாங்கொட்டையைக் கூடைக்குள் வைத்து, சிறிது நேரத்தில் மா மரத்தை முளைக்கச் செய்தலும்; பெட்டிக்குள் ஒரு மனிதனை வைத்துப் பூட்டிப் பிறகு திறந்து பார்த்தால், பெட்டி காலியாகக் கிடப்பதும்; தொப்பிக்குள்ளிருந்து முயலை

வெளிப்படுத்துவதும் ஆக இத்தகைய வேலைகளையெல்லாம் 'அற்புதம்' என கூறிவிட முடியாது! இவையெல்லாம் கைத் திறனைக்கொண்டும், புத்தி சாதுரியத்தைக் கொண்டும் செய்யப்படும் மாயா ஜால வேடிக்கைகள்! இத்தகைய 'அற்புதங்களை' எவரும் கற்றுக்கொண்டு சர்வ சாதாரணமாகச் செய்து விடலாம். ஆனால் அல்லாஹ்வின் தூதர்களைக் கொண்டு வெளிப்படும் அற்புதங்களுக்கும் கண் கட்டி வித்தையால் ஏற்படும் அற்புதங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், அல்லாஹ்வின் தூதர்களைக்கொண்டு வெளிப்படும் அற்புதங்கள், அல்லாஹ்வின் தூதர்கள் அல்லாஹ்வின் நாட்டப்படி வெளிப்படுத்துகிறார்கள். இத்தகைய அற்புதங்கள் சாதாரண மக்களால் எவ்வளவு முயன்றாலும் அறவே நிகழ்த்திக் காட்ட முடியாது! ஆனால் கண் கட்டி வித்தைகளால் நிகழும் அற்புதங்களை தொழில் தெரிந்த யாரும் செய்யலாம்.

ஜின்களை வசியப்படுத்திக் கொண்டும், ஷைத்தான்களை வசியப்படுத்திக் கொண்டும் அவற்றின் மூலமும் சிலர் அற்புதங்களைச் செய்வர். இத்தகைய அற்புதங்கள் நீடித்து நிலைப்பதில்லை. குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் அவை மறைந்து விடும். ஜின்களை, ஷைத்தான்களை ஏவி, சிலர் சில பொருள்களை வெகு இலகுவில் அடைந்து விடுவர். இவையும் அற்புதம் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் அந்த ஜின்களும், ஷைத்தான்களும் அப்பொருள்களைத் திருடிக் கொண்டுதான் வந்து சேர்ப்பிக்கின்றன. 'இத்தகைய பொருள்களும், இத்தகையத் தொழில் முறைகளும் அனுமதிக்கப்பட்டதல்ல' என்று இஸ்லாம் தடை விதித்து விட்டது!

3. அண்ணல் நபி மூ... களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள்

''எவர் (மக்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைத்து(த் தாமும்) நற் செயல்களைச் செய்து, 'நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபடக் கூடிய) முஸ்லிம்களில் ஒருவன்' என்று கூறுகிறாரோ, அவரை விட அழகிய வார்த்தையைக் கூறுபவர் யார்?''

— அல்குர்ஆன், அத்தியாயம்—41, வசனம்—33

''மக்களை நன்மையின் பக்கம் அழைத்து, நல்லதை ஏவித் தீயதை விலக்கும் ஒரு கூட்டம் உங்களில் இருப்பது அவசியம்! அவர்கள்தாம் வெற்றி அடைந்தவர்கள்.''

— அல்குர்ஆன், அத்தியாயம் —3, வசனம்—104

''உங்களில் எவரேனும் தீமை நடைபெறக் கண்டால், அதைத் தம் கையினால் தடுக்கவும்; அதற்குச் சக்தி இல்லாவிட்டால், நாவினால் (கூறி) அதைத் தடுக்கவும்; அதற்கும் முடியாவிட்டால், தம் மனதில் அதைத் 'தீயகாரியம்' என்று எண்ணவும். இது விஸ்வாசத்தின் மிகத் தாழ்ந்த நிலையாகும்!''

— அண்ணல் நபி (ஸல்-அம்)

''அறிவாளியின் நாவு அவனின் ஹிருதயத்திற்குப் பின் இயங்கும்; அறிவிலியின் ஹிருதயம் அவனின் நாவிற்குப் பின் இயங்கும். மனிதன் மறைத்து வைத்திருக்கும் இரகசியங்களை அவனின் நாக்கின் சுழற்சியும், முகத்தின் மாறுதலும் தெளிவுபடுத்தி விடுகின்றன. நாவு ஒரு

காட்டு மிருகம்! அதனை அவிழ்த்து விட்டால் ஆபத்து தான்!''

— ஹஜ்ரத் அலீ (ரலி)

''எகிப்தபி சீனியா, ரோம்
ஏற்றஞ்சேர் பார சீகம்
மிகுபுகழ் சிரியா வுக்கே
கடிதங்கள் விடுத்தார் நெஞ்சே!''

— மவுலவி பாஜில் ஜி. எம். ஸிராஜ் பாகவி

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு அண்ணலார் சற்று நிம்மதியான வாழ்வை மேற்கொண்டார்கள். அந்தச் சூழ்நிலையில் பல அரசர்களுக்குக் கடித மூலம் அழைப்பு விடுக்க எண்ணங் கொண்டார்கள். அத்தகைய அழைப்பு விடுக்கப்பட்ட மன்னர்கள் வருமாறு:

1. உரோமானியப் பேரரசர் கெய்ஸர், 2. திமஷ்கின் காவலர் ஹாரிஸிப்னு அபீ ஷுமர், 3, பாரஸீக மன்னர் கிஸ்ரா அப்ருயஸிப்னு ஹுர்முஸ், 4. எகிப்து மா மன்னர் ஜுரைஜிப்னு மீனா முகவ்கிஸ் கிப்தி, 5. அபிஸீனிய மன்னர் நஜ்ஜாஷில் அஸ்ஹமிப்னு அப்ஜர், 6. யமாமா நாட்டு அதிபர் ஹவ்திப்னு அலிய்யில் ஹனபி, 7. பஹ்ரைன் தேசத்து மன்னர் முன்திரிப்னு ஸாவா தைமீ, 8. உம்மான் நகரத்து அதிபதி ஜைபர் ஆகியோர். இந்த அழைப்புகளைப் பெற்ற சிலர் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொண்டனர்; சிலர் அந்த அழைப்பைக் கொண்டு வந்தவர்களுக்கு வெகு மதிகளைக் கொடுத்து, அவர்களைக் கவுரவித்தனர்: சிலர் அழைப்பைக் கொண்டு வத்தவர்களை வாய்க்கு வந்தவாறு திட்டி அந்த அழைப்புக் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித் தெறிந்தனர். இக்கடிதங்களின் மேல் முத்திரையிடப்பட்டிருந்தது. அந்த வட்ட வடிவமான முத்திரையின் மேல் பகுதியில் 'அல்லாஹ்' என்றும், இடைப் பகுதியில் 'ரஸூல்'

என்றும், கீழ்ப்பகுதியில் 'முஹம்மத்' என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. ஹிஜ்ரீ 7-ல் இக்கடிதங்கள் எழுதப்பட்டன.

கெய்ஸருக்கு எழுதப்பட்ட கடிதம்!

1) உரோமானியக் கிறிஸ்துவப் பேரரசர் கெய்ஸருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதப்பட்டது;

பிஸ்மில்லாஹிர் ரஹ்மா னிர்ரஹீம்,

''அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாகிய முஹம்மத், ரோமாபுரி பேரரசருக்கு எழுதிய கடிதமாவது;

''நேர்வழியைப் பின்பற்றுகிறவர்களுக்கு நல்வாழ்வு உண்டாவதாகுக. நான், உம்மை இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவும்படி அழைக்கிறேன். நீர் இஸ்லாத்தில் சேரும். நலமாக இருப்பீர், அல்லாஹ் உமக்கு இரட்டைக் கூலியைக் கொடுப்பான். நீர் ஒப்புக் கொள்ளவில்லையானால் உம்முடைய குடிமக்களின் பாவங்களெல்லாம் உம்மையே சாரும். அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேதங்களையுடையவர்களே! உங்களுக்கும், நமக்கும் ஒற்றுமையாய் இருக்கிற ஒரு விஷயத்தில் வந்து சேருங்கள். நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாதென்பதும், அவனுக்கு யாதொரு பொருளையும் இணையாக்கக் கூடாதென்பதும், நம்மில் எவரும் அவனையன்றி வேறு எவரையும் அல்லாஹ்வாகக் கருதக்கூடாது என்பதுமேயாகும், நீங்கள் இவ் விஷயங்களை ஒப்புக்கொள்ளாமல் புறக்கணித்தால், நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருப்பதாகச் சொல்லுங்கள்.''

இக்கடிதம் ஹஜ்ரத் திஹ்யத்துல் கல்பி (ரலி) அவர்கள் மூலம் கொடுக்கப்பட்டது. இக்கடிதம் ஹிஜ்ரீ-7 முஹர்ரம் மாதத்தில் (கி. பி. 628) உரோமானியப் பேரரசருக்குக்

கொடுக்கப்பட்டது. இக்கடிதம் கொடுக்கப்படும் பொழுது அவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட—அதுவரை முஸ்லிமா காதிருந்த அபூ ஸுஃப்யானுக்கும், மன்னர் கெய்ஸருக்கும் ஒரு பெரிய வாக்குவாதமே நடந்தது. அதில் அண்ணலா ரைப் பற்றிய பல விஷயங்கள் பேரரசருக்குத் தெரிய வந் தது. உள்ளூர அவருக்கு இஸ்லாத்தில் இணைந்துவிட ஆசை தான். ஆனால் குடிமக்களுக்குப் பயந்து அவர் இஸ்லாத்தில் இணையவில்லை.

— ஆதாரம்: ஃபத்ஹுல் பாரி

கிஸ்ராவுக்கு எழுதப்பட்ட கடிதம்!

2) ஈரான் (பாரஸீகம்) தேசத்து மன்னரான கிஸ்ரா அப்ருயனிப்னு ஹுர்முஸுக்கு எழுதப்பட்ட கடிதம் வருமாறு;

பிஸ்மில்லாஹிர் ரஹ்மா னிர்ரஹீம்

அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாகிய முஹம் மத், பாரஸீக மன்னரான கிஸ்ராவுக்கு எழுதிய கடிதமாவது:

''நேர்வழியைப் பின்பற்றி, அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் விசுவாசங் கொண்டு, அல் லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் யாரு மில்லை என்றும், என்றுமே வாழ்ந்து வருபவன் மூலம் ஒவ்வொருவருக்கும் அச்சமூட்டி எச்சரிப்பதற்காக எல்லா மனிதருக்குமாக நான் தூதனாக வந்திருக்கிறேன். இதற்கு சாட்சி சொல்பவர் மீது நலவு உண்டாவதாகுக. அல்லாஹ்வின் உத்திரவின்படி நான் உமக்கு அழைப்புத் தருகிறேன்: இஸ்லாத்தில் இணைந்து கொள்ளும்; நல முடனிருப்பீர். மறுப்பீரேயானால், நெருப்பை வணங்குப வர்களுடைய எல்லோரின் பாவமும் உம்மையே சார்ந்து நிற்கும்!''

இக்கடிதம் ஹிஜ்ரீ-7 ஜமாதுல் ஊலா மாதத்தில் ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு ஹுதாபதஸ் ஸஹமி (ரலி) அவர்கள் மூலம் அனுப்பப்பட்டது.

இக்கடிதத்தைக் கண்டதும் கிஸ்ராவுக்குக் கடுங் கோபம் வந்து விட்டது; காரணம், கடிதத்தின் தலைப்பில் அவன் பெயரில்லை. அல்லாஹ்வின் பெயரும், அண்ணலாரின் பெயரும் இருந்தது அவனுக்கு பெரிய அவமானமாகப் போய் விட்டது. "என்னுடைய ஆட்சியிலிருக்கும் ஓர் அடிமையா எனக்கு இப்படி உத்திரவு கொடுப்பது?" என்று சீறிக் கொண்டே அக்கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து விட்டான். இச்சம்பவத்தை ஹஜ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அண்ணலாரிடம் கூறியதும் "அந்த அரசனுடைய நாடும் சுக்கு நூறாகச் சிதறி விடும்!" என்றார்கள் அண்ணலார்.

அந்த அரசன் எமன் நாட்டிலுள்ள தன்னுடைய ஆளுநர் பாதானுக்கு, "உடனே இரு முரடர்களை ஹிஜாஸுக்கு (மக்கா, மதீனா இருந்த பகுதி) அனுப்பி எனக்குக் கடிதம் எழுதிய அந்த நபரைக் கைது செய்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்தவும்" என்று கடிதம் எழுதினான்.

அக்கடிதப்படி பாதான், ஒரு கடிதம் கொடுத்து இரு நபர்களை அண்ணலாரிடம் செல்லுமாறு அனுப்பி வைத்தார். அவ்விருவரும் மதீனாவிற்கு வந்து, அண்ணலாரின் சிறப்பைக் கண்டதும் பயந்து நடுநடுங்கிப் போய்விட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த கடித வாசகத்தைப் படிக்கக் கேட்ட அண்ணலார் புன்முறுவல் செய்த வண்ணம் அவ்விருவரையும் மறுநாள் வருமாறு உத்திரவிட்டார்கள். அவ்விருவரும் மறுநாள் வரவே அண்ணலார் அவர்களிடம் "உங்களுடைய அரசனை அவருடைய மகன் ஷிவேரியா கொலை செய்துவிட்டான்" என்று கூறி, "இத்தகவலை பாதானுக்குத் தெரிவிக்கவும்; கிஸ்ராவின் ஆட்சி எது வரை இருக்கிறதோ, அந்த எல்லை வரை என்னுடைய மார்க்கமும் பரவி விடும் என்றும்

தெரிவிக்கவும்'' என்று சொல்லி அனுப்பினார்கள். அண்ண லார் கூற்றுப்படியே இஸ்லாம் வெகு விரைவில் ஈரான் முழு மையும் பரவி விட்டது. கிஸ்ரா கொல்லப்பட்டது ஹிஜ்ரி-7 ஜமாதுல் ஊலா பத்தாந் தேதி திங்கள் கிழமை இரவு.

— ஆதாரம்; 'பிதாயா', 'ஜுர்கானி'

நஜ்ஜாஷிக்கு எழுதப்பட்ட கடிதம்!

3) அபிஸீனியா (எதியோப்பியா) மன்னர் நஜ்ஜாஷில் அஸ்ஹமுக்கு எழுதப்பட்ட கடிதமாவது;

பிஸமில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''அல்லாஹ்வின் தூதரும், அடியாருமாகிய முஹம் மத் சார்பில் அபிஸீனியா மன்னர் நஜ்ஜாஷிக்கு எழுதிக் கொண்டதாவது;

''உம்மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதா குக. எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே. அவ னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவனே உண்மையான அரசன். எல்லாக் குறைகளி லிருந்தும் அப்பாற்பட்டவன். அவனே அமைதியளிப் பவன்; எல்லோருக்கும் பாதுகாப்பளிப்பவன். மரிய முடைய குமாரர் ஈஸா அல்லாஹ்வின் விசேஷ ஆத்மாவா கவும், அவனின் சொல்லாகவும் இருக்கிறார் என்பதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன். தாய்—தந்தையற்ற நிலையில் அல்லாஹ் ஆதமைப் படைத்ததைப் போல, தந்தையற்ற நிலையில் தன் சக்தியைக் கொண்டு ஈஸா வைப் படைத்துள்ளான். நான் இணை, துணையற்ற அல்லாஹ்வின் பக்கம் உம்மை அழைக்கிறேன். அல் லாஹ்விற்கு மட்டும் அடிபணிந்து வழிபட்டு வரவும். அவன் புறத்திலிருந்து என் மீது அருளப்பட்டது (திரு குர்ஆன்) மீது விசுவாசம் கொள்ளவும். நிச்சயமாக நான் அல்லாஹ்வின் ஒரு தூதனாக இருக்கிறேன். உம்

மையும், உம்முடைய பரிவாரங்களையும் அல்லாஹ்வின் பக்கம் வருமாறு நான் அழைப்பு விடுவிப்பதை ஏற்று நேர்வழி பெற்று அமைதி பெறுவீராக.''

இக்கடிதத்தை ஹஜ்ரத் அம்ரு இப்னு உமையா ழம்ரி (ரலி) அவர்கள் நஜ்ஜாஷி மன்னரிடம் கொடுத்து தாமும் சில புத்திமதிகளைக் கூறினார்கள்.

மன்னர் நஜ்ஜாஷி அக்கடிதத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கடிதம் கொண்டு வந்தவருக்கும் மிகவும் மரியாதை கொடுத்து ''நபி மூஸா (அலை) அவர்கள் மூலம் எங்கள் நபி ஈஸாவைப் பற்றிய முன்னறிவிப்புச் செய்ததைப் போல வேதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டவர்களும், எங்கள் நபி ஈஸா (அலை) அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட வர்களுமான உங்கள் நபியின் வருகையை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் அல்லாஹ் வின் தூதர் என்று நான் விசுவாசிக்கிறேன்'' என்று கூறி அண்ணலாருடைய கடிதத்திற்குப் பின்வருமாறு பதில் கடிதம் எழுதினார்;

நஜ்ஜாஷியின் பதில் கடிதம்!

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''நஜ்ஜாஷில் அஸ்ஹம் சார்பில் அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுக்கு எழுதிக் கொண்டது.

''அல்லாஹ்வின் அருளும், வளமும் தங்கள் மீது பொழிவதாகுக. இஸ்லாத்தின் பக்கம் என்னை அழைக்க அருள் பாலித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். தங்கள் அன்புக் கடிதம் கிடைத்தது. நபி ஈஸா (அலை) அவர்களைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டது முற்றிலும் உண்மையே! தாங்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் தாம் என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்

கொண்டு தங்கள் கடிதம் கொண்டு வந்தவர் கை மீது கை வைத்து உறுதிமானம் ('பைஅத்') செய்து கொண்டேன். தங்களுடைய சமூகத்தில் என்னுடைய மகன் அர்ஹா இப்னு அஸ்ஹமை அனுப்பியுள்ளேன். தாங்கள் விரும்பினால் நானே தங்கள் சமூகத்தில் ஆஜராகவும் தயாராயுள்ளேன்.''

மன்னர் நஜ்ஜாஷி தம் மகனிடம் இக்கடிதத்தைக் கொடுத்து தம் நாட்டைச் சார்ந்த 60-பேரை உடன் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அனைவரும் மதீனா நோக்கி ஒரு கப்பலில் பிரயாணப்பட்டனர். ஆனால் அந்தக் கப்பல் வழியில் மூழ்கிப் போய்விட்டது. இந்த மன்னர் நஜ்ஜாஷி ஹிஜ்ரீ-9 ரஜப் மாதத்தில் காலமாகி விட்டார். இத் தகவலை அறிந்த அண்ணலார் மதீனாவிலுள்ள ஈத்காஹ்வில் தங்களின் தோழர்களுடன் 'ஜனாஸா' தொழுகை (காயிப் ஜனாஸா தொழுகை) நடத்தினார்கள்.

— ஆதாரம்: ஜாதுல் மஆத், ஜுர்கானி

முகவ்கிஸூக்கு எழுதப்பட்ட கடிதம்!

4) எகிப்திய மன்னர் முகவ்கிஸூக்கு எழுதப்பட்ட கடிதமாவது;

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாகிய முஹம்மத் சார்பில், முகவ்கிஸூக்கு எழுதிக் கொண்டதாவது; நேர்வழி பெறுபவர்கள் மீது சாந்தியும், சமாதானமும் ஏற்படுவதாகுக.

நான் இஸ்லாத்தின் பால் உம்மை அழைக்கிறேன். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டால் அல்லாஹ் உமக்கு இரட்டிப்புக் கூலி தருவான். மறுத்தால் உம்முடைய கூட்டத்தாராகிய அனைத்து கிப்தியாக்களின்

பாவமும் உம்மையே சாரும். ஓ வேதமுள்ளவரே! உமக்கும், நமக்குமிடையே உள்ள உண்மையின் பக்கம் வாரும். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்காதீர்! அவனுக்கு யாரையும் இணை வைக்காதீர். உம்மையும், நம்மையும் படைத்தவன் அந்த அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. இதனை நீர் ஆட்சேபிப்பதாயின், நாம் முஸ்லிம்களாயிருந்து அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்தவர்களாயிருந்தோம் என்பதற்குச் சாட்சியாக இருந்து கொள்ளும்.''

இக்கடிதத்தை ஹஜ்ரத் ஹாதிபிப்னு அபீ பல்தஆ (ரலி) அவர்கள் மூலம் எகிப்திய மன்னர் முகவ்கிஸ்ஸுக்கு அனுப்பப்பட்டது. ஹஜ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் அக்கடிதத்தைப் பெற்று, மன்னர் முகவ்கிஸ்ஸைக் காண எகிப்துக்குச் சென்றார்கள், ஆனால் அந்த மன்னர் இஸ்கந்திரியாவில் இருப்பதை அறிந்து அங்குச் சென்று அண்ணலாரின் கடிதத்தை மன்னரின் கையில் கொடுத்தார்கள். மன்னர் மிகவும் மரியாதையுடன் அக்கடிதத்தைப் பெற்று ஹஜ்ரத் ஹாதிப் தங்குவதற்காக வசதியும் செய்து கொடுத்தார்.

ஒரு நாள்; சபையில் பெரிய பெரிய மேதைகளும், மார்க்க வல்லுநர்களும் அமர்ந்திருந்தனர். மன்னர் முகவ்கிஸ், ஹஜ்ரத் ஹாதிம் (ரலி) அவர்களைச் சபைக்கு அழைத்து வரச் செய்து ''நான் தங்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்; தயவு செய்து நீங்கள் அதற்கு விளக்கமான பதில் தரவேண்டும்!'' என கேட்கவே, அவர்களும் 'சரி' என ஒத்துக் கொண்டார்கள்.

''நீங்கள் கொண்டு வந்த கடிதத்தை உங்களிடம் கொடுத்தவர் அல்லாஹ்வின் தூதர்தாமா?'' என கேட்டார் மன்னர்.

''நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் தூதர்தாம்!'' என்றார்கள் ஹஜ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள்.

''அப்படியானால் உங்களுடைய நபியை மக்காவாசிகள் அந்த ஊரை விட்டு விரட்டியபொழுது அந்த ஊர்வாசிகள் அழிந்துபோக வேண்டுமென்று ஏன் சாபமிடவில்லை?'' என கேட்டார் மன்னர்.

''நீங்கள் ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களை அல்லாஹ்வின் தூதர் தாம் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களல்லவா?'' என்று கேட்டார்கள் ஹஜ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள்.

அதிலென்ன சந்தேகம்? என்றார் மன்னர்.

அப்படியென்றால் அவர்களை, அவர்களின் விரோதிகள் கொடுமைபடுத்தி, சிலுவையில் ஏற்ற முயன்றார்களே! அப்பொழுது ஏன் அவர்கள் அந்த மக்களை அழித்துவிட சாபமிடவில்லை?'' என்று கேட்டார்கள் ஹஜ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள்.

''நீர் உண்மையில் பெரிய அறிவாளியாகத்தான் இருக்கிறீர்!'' என்றார் மன்னர்.

பிறகு ஹஜ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் அந்த மன்னருக்கு நல்லுபதேசம் செய்து இஸ்லாத்தில் இணைந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள், ஆனால் அந்த அரசர் அதற்கு இசையாது தம் கிறிஸ்துவ மார்க்கத்திலேயே நீடிக்க விருப்பம் தெரிவித்து அண்ணலாருக்குப் பின்வருமாறு பதில் கடிதம் எழுதினார்.

முகவ்கிஸின் பதில் கடிதம்!

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''அப்துல்லாஹ்வுடைய குமாரர் முஹம்மதுடைய சமூகத்திற்கு எகிப்துடைய அரசரும், கிப்தி சமூகத்தின் தலைவருமாகிய முகவ்கிஸ் எழுதிக் கொண்ட பதில் வருமாறு:

''நான், உங்கள் கடிதத்தைப் படித்தேன்; விஷயத்தையும் விளங்கிக் கொண்டேன். நீங்கள் எதன் பால் என்னை அழைக்கிறீர்கள் என்பதையும் புரிந்து கொண்டேன். 'கடைசியாக ஒரு நபி வரவிருக்கிறார்' என்பதும் எனக்குத் தெரியும்! ஆனால் அவர் ஸிரியாவிலிருந்து வெளிப்படுவார் என்று எதிர் பார்த்தேன். உங்கள் கடிதம் கொண்டு வந்தவரோடு மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்ளப்பட்டது. அவரோடு இரு பெண் அடிமைகளையும், சில ஆடைகளையும், ஒரு கோவேறு கழுதையையும் அன்பளிப்பாக அனுப்பியுள்ளதை அன்போடு ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.''

எகிப்திய மன்னர் முகவ்கிஸ் அனுப்பி வைத்த அடிமைப் பெண்களில் ஒருவருடைய பெயர்தான் ஹஜ்ரத் மாரியா கிப்தியா (ரலி). அண்ணலார் இவர்களை மணந்து கொண்ட பின் ஹஜ்ரத் இப்றாஹீம் (ரலி) என்ற ஆண் குழந்தை பிறந்தது. மற்றோர் அடிமைப் பெண்ணின் பெயர் ஸீரீன் ஆகும். இவரை ஹஜ்ரத் ஸாபித் (ரலி) மணந்து கொண்டார்கள். மன்னர் முகவ்கிஸ் எகிப்து மக்களுக்குப் பயந்து கொண்டு முஸ்லிமாகவில்லை என்றாலும் அண்ணலாருக்கும், முஸ்லிம்களுக்கும் மிகவும் கண்ணியம் கொடுத்து வந்தார்.

— ஆதாரம்; 'அல் கஸாயிஸுல் குப்ரா'

முன்திர் கடிதமும் அதற்குப் பதிலும்!

6, பஹ்ரைன் நாட்டு மன்னர் முன்திரிப்னு ஸாவா வுக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு அந்த மன்னர் அண்ணலாருக்கு எழுதிய கடித விவரமும்; அண்ணலாரின் பதில் கடித விவரமும்:

இதர மன்னர்களுக்கு அண்ணலார் இஸ்லாத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்ததைப் போலவே பஹ்ரைன் நாட்டு

மன்னரான முன்திரிப்னு ஸாவாவுக்கும் ஒருகடிதம் எழுதச் செய்து, அக்கடிதத்தை ஹஜ்ரத் அலா இப்னு ஹழ்ரமீ (ரலி) மூலம் அனுப்பி வைத்தார்கள். ஹஜ்ரத் அலா (ரலி) அவர்கள் அக்கடிதத்தை மன்னரிடம் கொடுத்து "நீர் பெரிய அறிவாளியாக இருக்கிறீர் என்பது உண்மை தான்! ஆனால் மறுமையைப் பற்றிய சிந்தனையில்லாது வாழ்ந்து வருகிறீர்; நெருப்பை வணங்கிக் கொண்டு வருகிறீர்; இந்த மார்க்கத்திற்காக அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒரு தூதரோ, ஒரு வேத நூலோ இல்லை. உங்கள் திருமண முறை வெகு ஆபாசம் நிறைந்ததாக உள்ளது. மனச் சாட்சி ஏற்றுக் கொள்ளாத பொருள்களையெல்லாம் உண்டு வருகிறீர்; மறுமை நாளில் உங்களை சுட்டெரிக்கும் நெருப்பைத்தானே இம்மையில் நீர் வணங்கி வருகிறீர்? இதைவிடப் பெரிய அறியாமை வேறு என்னவாக இருக்க முடியும்? நன்றாகச் சிந்தித்துக் கொள்ளும்! இனிய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, அல்லாஹ்வின் தூதரைப் பின்பற்றி, அல்லாஹ்வை மட்டும் வணங்கி வழிபட்டு வாரும். உமக்கு இம்மையிலும் நல் வாழ்வு உண்டு; மறுமையிலும் நல் வாழ்வு உண்டு" என்று உபதேசித்தார்கள்.

இதனைக் கேட்டதும் முஸ்லிமாகிவிட்ட அந்த பஹ்ரைன் நாட்டு மன்னர் முன்திரிப்னு ஸாவா, அண்ணலாருக்குப் பின் வருமாறு பதில் கடிதம் எழுதினார்:

அண்ணலாருக்கு முன்திர் எழுதிய கடிதம்!

"அல்லாஹ்வின் தூதருக்கு பஹ்ரைன் மன்னர் முன்திர் எழுதிக் கொண்டது:

"தங்கள் கடிதத்தை இங்குள்ள முக்கியஸ்தர்கள் முன் படித்துக் காட்டப்பட்டது; சிலர் இஸ்லாத்தில் இணைய ஒப்புக் கொண்டனர்; சிலர் மறுக்கின்றனர். இங்கு யூதர்களும் வாழ்கிறார்கள்; நெருப்பை வணங்கும்

மஜூஸிகளும் வாழ்கின்றனர். இவர்கள் விஷயத்தில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தங்களின் உத்திரவை எதிர்பார்க்கிறேன்.''

அண்ணலாரின் பதில் கடிதம்!

இக் கடிதத்திற்கு அண்ணலார் அனுப்பிய பதில் பின் வருமாறு:

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''பஹ்ரைன் நாட்டு மன்னர் முன்திரிப்னு ஸாவாவுக்கு அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் மூலம் அனுப்பப்பட்ட பதில் கடிதமாவது;

''உம்மீது சாந்தியும், அல்லாஹ்வின் அருளும் ஏற்படுவதாகுக. உம் சார்பில் நான் அல்லாஹ்வைப் புகழ்கிறேன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனே! நான் அவனுடைய தூதராக இருக்கிறேன். அல்லாஹ்வுடைய கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்ளும். அது உமக்கு நலவாக இருக்கும். யார் என்னுடைய தூதர்களைக் கவுரவித்தார்களோ, அவர் என்னைக் கவுரவித்தவர் போலாவார். உம் சமுதாயத்தினருக்காக நீர் செய்த பரிந்துரையை நான் ஏற்றுக் கொள்கிறேன். முஸ்லிமாகி விட்டவர்களுடைய பொருள்களைத் திருப்பித் தந்து விடவும்; முஸலிமாகி விட்டவர்களுடைய முன்னால் செய்த தவறுகளை நான் மன்னித்து விடுகிறேன். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த யூதர்கள் மீதும், மஜூஸிகள் மீதும் 'ஜிஸ்யா' வரி விதிக்கப்படும்.''

பஹ்ரைனிலிருந்த பெரும்பாலோர் முஸ்லிமாகி விட்டனர்: ஒரு சிலரே முஸ்லிமாகவில்லை.

—ஆதாரம்; 'ஜுர்கானி', 'ஜாதுல் மஆத்'

ஜைஃபர், அப்துவுக்கு எழுதப்பட்ட கடிதம்!

6. அம்மான் நாட்டு மன்னர்களான ஜைஃபர், அப்துவுக்கு அண்ணலார் மூலம் அனுப்பப்பட்ட கடிதம்:

அம்மான் நாட்டு மன்னரின் பெயர் பிஸ்ரான் ஜலந்தீ ஆகும். இவருக்கு வயதாகி விட்டதால் தம்முடைய இரு குமாரர்களான ஜைஃபர், அப்து வசம் ஆட்சியை ஒப்படைத்து விட்டார். இவ்விருவருக்கும் ஹிஜ்ரீ 8 துல்கஅதா மாதத்தில் ஹஜ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் மூலம் பின்வரும் கடிதம் அனுப்பப்பட்டது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''பிஸ்ரான் ஜலந்தீ, ஜைஃபர், அப்துக்கு, அல்லாஹ்வின் தூதர், அப்துல்லாஹ்வின் குமாரர் முஹம்மத் எழுதிக் கொண்ட கடிதம்;

''நேர்வழி பெறுவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் அருளும் ஏற்படுவதாகுக.

''உங்களை இஸ்லாத்தின்பால் வந்து விடுமாறு அழைப்பு விடுக்கிறேன்; இஸ்லாத்தில் இணைந்து சாந்தியுடன் வாழலாம், நான் அல்லாஹ்வின் தூதராக இருந்து, அவனுடைய வேதனையைக் கொண்டு எச்சரிக்கிறேன். இஸ்லாத்தை ஏற்றால், உங்களின் ஆட்சி நிலைத்து நிற்கும்; ஏற்க மறுத்தால் அதுகுலைந்துவிடும். என்னுடைய போர் வீரர்கள் உங்கள் வீட்டு முற்றம் வரை வந்து விடுவர். என்னுடைய நபித்துவக் கொள்கை உங்கள் அனைவரையும் வெற்றிக் கொள்ளும்.''

அண்ணலாரின் இக்கடிதத்தை எடுத்துக் கொண்டு அம்மான் நாடு சென்ற ஹஜ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் முதலில் அப்துவைக் கண்டு தாம் வந்த நோக்கத்தைக் கூறினார்கள். ஜைஃபர் தம் மூத்த சகோதரர் என்

றும், கடிதத்தை அவரிடம் கொடுப்பதே சிறந்தது என்றும் அப்து கூறி விட்டு சில விஷயங்களைப் பற்றி ஹஜ்ரத் அம்ரு (ரலி) அவர்களிடம் கேட்டார். அவர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அவர்கள் மிகவும் விளக்கமாகப் பதில் சொன்னார்கள். பிறகு அப்து, அவர்களைத் தம்முடைய மூத்த சகோதரர் ஜைஃபரிடம் அழைத்துச் சென்றார். ஜைஃபரும் அவர்களிடம் சில சந்தேகங்களைக் கேட்டு விளங்கிக் கொண்டார். பிறகு சகோதரர்கள் இஸ்லாத்தில் இணைந்து விட்டதாக நாட்டு மக்களுக்குப் பிரகடனஞ் செய்தார்கள். இதனைக் கேட்ட பெரும்பாலான மக்கள் இஸ்லாத்தில் இணைந்தனர்.

— ஆதாரம்; ஜாதுல் மஆத், ஜுர்கானி, இஸாபா

ஹெளஜாவுக்கு எழுதப்பட்ட கடிதம்!

7. யமாமா நாட்டுத் தலைவன் ஹெளஜதிப்னு அலீக்கு அண்ணலார் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் வருமாறு:

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் சார்பில் ஹெளஜதிப்னு அலீக்கு எழுதப்பட்ட கடிதம்;

நேர்வழி பெற்றவர்மீது அல்லாஹ்வின் சாந்தியும், அருளும் உண்டாவதாகுக,

''ஒட்டகங்களும், குதிரைகளும் போய்ச் சேரும் இடம் வரை என்னுடைய மார்க்கமும் போய்ச்சேரும் என்பதை அறிந்து கொள்ளவும். இஸ்லாத்தில் இணைந்தால் நிம்மதியாக வாழ முடியும்; பறிக்கப்பட்ட பொருள்கள் மீதும் உமக்கு உபயோகிக்க உரிமை தரப்படும்.''

இக் கடிதத்தைக் கொண்டு சென்ற ஹஜ்ரத் ஸலீதிப்னு அம்ரு (ரலி) அவர்கள் ஹெளஜாவைச் சந்தித்து அண்ணலாரின் கடிதத்தைக்கொடுத்தார்கள்; அதைப்பெற்றுப் படித்த ஹெளஜா இஸ்லாத்தில் இணையத் தயாராகவில்லை. ஹஜ்ரத்

ஸலீத் (ரலி) அவர்கள் அவனை நோக்கி, ''பழம் பஸலிகள் உன்னைத் தலைவனாக்கி விட்டார்கள். கெட்டதை விட்டு நல்லதை நாடு! ஷைத்தானை வணங்குவதை விட்டு விட்டு அல்லாஹ்வை மட்டும் வணங்கி வா! இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டால் நிம்மதி பெறுவாய்; நிராகரித்தால் எங்களுக்கும் உனக்குமிடையே உள்ள மறுமை நாளின் பயங்கரத் திரை விலகி விடும். பிறகு நீ கை சேதப்படுவாய்!'' என்று நற்போதனை செய்தார்கள்.

''இஸ்லாத்தில் இணைய நான் சற்றுச் சிந்தித்துக்கொள்கிறேன்: அதுவரை எனக்கு கெடு கொடுக்கவும்'' என்று கூறி விட்டு அண்ணலாருக்கு எழுதிய பதிலில், ''எதன் பக்கம் நீங்கள் என்னை அழைக்கிறீர்களோ, அது நலவாகத்தானிருக்கிறது; ஆனால், நான் உங்கள் நாட்டு மக்கள் மீது சிறிது ஆதிக்கம் செலுத்தும் சந்தர்ப்பத்தை எனக்குத் தாருங்கள். அறபு மக்கள் என்னைக் கண்டு அஞ்சி நடுங்கட்டும்'' என்று குறிப்பிட்டான்.

இக் கடிதத்தைப் படிக்கக் கேட்ட அண்ணலாரின் முகம் மாறி விட்டது. ''ஒரு ஜாண் நிலம் கேட்டாலும் கூட நான் கொடுப்பதற்கில்லை!'' என்றார்கள் அண்ணலார். மக்கா வெற்றிக்குப் பின் ஹௌஜா இறந்து விட்டதாக அண்ணலாருக்குத் தகவல் கிட்டியது. ''யமாமாவில் வெகு விரைவில் ஒரு பொய்யன் வெளிப்பட்டு தன்னை ஒரு 'நபி' என்று கூறிக் கொண்டு திரிவான். நான் இவ்வுலகை விட்டுச் சென்ற பின் அவன் கொல்லப்பட்டுப் போவான்'' என்றார்கள் அண்ணலார். அவர்கள் கூறியபடியே எல்லாம் நடந்தன.

—ஆதாரம்: 'ஜாதுல் மஆத்'

ஹாரிஸுக்கு எழுதப்பட்ட கடிதம்!

8. திமஷ்க் நாட்டுத் தலைவன் ஹாரிஸ் கஸ்ஸானிக்கு அண்ணலார் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் வருமாறு:

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

''அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் மூலமாக ஹாரி ஸிப்னு அபீ ஷுமருக்கு எழுதிக் கொண்டதாவது:

''அல்லாஹ்வின் மீது விசுவாசங் கொண்டு அவனு டைய கட்டளைகளை ஏற்றுச் செயல்பட்டு நேர்வழி பெற்றவர் மீது அல்லாஹ்வின் சாந்தியும், அருளும் உண்டாவதாகுக. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவன்தான் என்பதைஏற்றும்அவனுக்கு இணை,துணை யாருமில்லை என்பதை ஏற்றும் விசுவாசித்து வந்தால் உன்னுடைய ஆட்சி நிலைத்து நிற்கும்.''

அண்ணலாரின் இக்கடிதத்தை, ஹஜ்ரத் ஷுஜா இப்னு வஹப் அஸதி (ரலி) அவர்கள் பெற்றுக் கொண்டு திமிஷ்க் வந்தார்கள். ஆனால் உடனடியாக ஹாரிஸைச் சந்திக்க முடியவில்லை. பிறகுதான் அவனைச் சந்திக்க முடிந் தது. கடிதத்தைப் படித்ததும் கோபத்தால் அதனை வீசி யெறிந்தான். ஹிஜாஸ் (மக்கா-மதீனா அடங்கிய நாடு)மீது படையெடுக்கஆயத்தமானான். இத்தகவலையறிந்தஉரோமா புரி பேரரசர் அவனைக் கண்டித்து படையெடுப்பதைத் தடுத்து விட்டார். இத்தகவலை அண்ணலார் கேட்டதும் 'அவன் நாடு அழிந்து விடும்!'' என்று கூறினார்கள்.

—ஆதாரம்: 'தபகாத்', 'ஜுர்கானி'

அண்ணலாருக்குரிய தனிச் சிறப்பு!

அல்லாஹ் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும், இனத்தாருக் கும், மொழிவாரியாகவும் தன் தூதர்களை அனுப்பி வைத் தான்; ஆனால் அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களை மட்டும் அகில உலக மக்களுக்காக மட்டுமல்லாது, ஜின் வர்க்கத்திற் கும், மற்ற ஜீவராசிகளுக்காகவும் மொத்தமாகச் சேர்த்தே தன் தூதராக இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தான். எனவே தான் அவர்கள், இஸ்லாத்தில் இணையுமாறு அழைப்பு

விடுத்து அறபு நாட்டிலிருந்த இணை வைப்பவர்களுக்கும் ('முஷ்ரிக்') நிராகரிப்பவர்களுக்கும் ('காஃபிர்') மட்டுமல்லாது, வேறு நாடுகளிலிருந்த கிறிஸ்துவர்களுக்கும், யூதர்களுக்கும், நெருப்பை வணங்கும் மஜூஸிகளுக்கும் கூட அழைப்பு விடுத்தார்கள். இந்த அடிப்படையில்தான் அவர்கள், யூத, கிறிஸ்துவ, மஜூஸி மன்னர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அழைப்புக் கடிதங்களை அனுப்பினார்கள்.

ரோமாபுரி மன்னர் கைஸர் ஒரு கிறிஸ்துவப் பேரரசராக இருந்தார்; அவர் அதிகாரத்தின் கீழ் பல சிற்றரசுகள் இருந்தன. இஸ்லாத்தைப் பற்றி விளங்கிக் கொண்டார்; ஆனால் முஸ்லிமாகவில்லை; எகிப்து மன்னர் முகவ்கிஸ் ஒரு கிறிஸ்துவ மன்னர்தான். இஸ்லாத்தை ஆட்சேபிக்கவில்லை; ஆனால் முஸ்லிமாகவில்லை. அபிஸீனியா மன்னர் நஜ்ஜாஷி ஒரு கிறிஸ்துவராக இருந்தார்; இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகி விட்டார். முஸ்லிமாகாத யூத, கிறிஸ்துவர்கள் மீது 'ஜிஸ்யா' வரி விதிக்கப்பட்டது. முதன் முதலாவதாக இந்த வரி நஜ்ரானிலிருந்த கிறிஸ்தவர்கள் மீதுதான் விதிக்கப்பட்டது, வயது வந்தவர்கள் மீது தலைக்கு ஒரு 'தீனார்' வீதம் விதிக்கப்பட்டது. இத்தொகை அவர்களின் பாதுகாப்புக்காகவே செலவிடப்பட்டது.

ஹிஜ்ரீ 7-லிருந்து யூதர்களோடு மோதும் சூழ்நிலை ஏற்பட்டது. ஹிஜ்ரீ 8-லிருந்து கிறிஸ்துவர்களோடு மோதும் சூழ்நிலை ஏற்பட்டது; ஹிஜ்ரீ 9-லிருந்து கிறிஸ்துவப் பேரரசுகளோடு மோதும் சூழ்நிலை ஏற்பட்டது. கைபர் யுத்தம், மூத்தா யுத்தம், தபூக் யுத்தம் ஆகிய யுத்தங்களெல்லாம் இதன் அடிப்படையில் ஏற்பட்டவைதாம்;

4. அண்ணல் நபி பொருளடக்கம் தோற்றம்!

''(விசுவாசிகளே!) உங்களிலிருந்து நிச்சயமாக (நம்முடைய) ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார். (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டத்திற்குள்ளாகி விட்டால், (அது) அவருக்கு மிக்க வருத்தமாகவே இருக்கும். (அவ்வளவு தூரம் உங்கள் மீது அன்புடையவர்.) அன்றி, உங்(கள் நன்மை)களைப் பெரிதும் விரும்புகின்றவராகவும், விசுவாசி(களாகிய உங்)கள் மீது மிக்க அன்பும், கிருபையும் உடையோராகவும் இருக்கின்றார். (நபியே! இதற்குப்) பின்னரும், அவர்கள் (உம்மைப் பின்பற்றாது) விலகிக் கொண்டால், (அவர்களை நோக்கி,) நீர் கூறும்; 'அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்; அவனைத் தவிர வேறு நாயனில்லை, (என் காரியங்கள் யாவிலும்) அவன் மீது நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன். அவன் தான் மகத்தான 'அர்ஷின்' அதிபதி.''

—அல்குர்ஆன்: அத்தியாயம்—9, வசனங்கள்—128, 129

''எவர் தம் சகோதரரின் மானம் பறி போவதைக் காத்துக் கொள்கிறாரோ, அவருடைய முகத்தை விட்டும் இறைவன் மறுமை நாளில் நரக நெருப்பை அப்புறப் படுத்தி விடுவான்.''

—அண்ணல் நபி (ஸல்-அம்)

''தன் நண்பனுக்கு இரகசியமாக உபதேசிப்பவன் அவனுடைய நன்மையைக் கருதி அவனைக் கண்ணியப் படுத்தியவனாவான்; உரத்தத் தொனியில் உபதேசிப் பவன் தன் நண்பனைக் கேவலப்படுத்தி அவனைத் தலை குனியச் செய்பவனாவான். உன் நண்பன் மீது நீ வைத் திருக்கும் நம்பிக்கையை இழந்து விடாதே!''

—இமாம் ஷாஃபிஈ (ரஹ்)

"மோனத்தின் முடியில் நின்று
முழுமையாம் உணர்வில் ஒன்றி
ஞானத்தின் முடியைக் கண்ட
நற்றிறன் என்னே நெஞ்சே!"
—மவுலவி பாஜில் ஜி. எம். ஸிராஜ் பாகவி

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களை அல்லாஹ் நம்மிடம் ஒரு மனித நமூனாவாகத்தான் அனுப்பி வைத்தான். அவர்களின் ஒவ்வோர் அங்க அசைவும் நமக்கு ஓர் அழகிய முன்மாதிரியாகும். எனவே அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும், செயலும் கூட நமக்கு விமோசனம் தரும் ஆற்றல் பெற்றுள்ளன. அண்ணலார் எப்படி வாழ்ந்தார்கள்? எப்படிக் குடும்பம் நடத்தினார்கள்? எப்படிச் சாப்பிட்டார்கள்? எப்படித் தூங்கினார்கள்? எப்படி உடை உடுத்தினார்கள்? எப்படி முடி வளர்த்தார்கள்? எப்படி உட்கார்ந்தார்கள்? எப்படி நடந்தார்கள்? என்பதையெல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளனர். அவர்கள் எத்தகையத் தோற்றமுள்ளவர்கள்? என்பதற்கு நம்மிடம் அவர்களின் உருவச் சிலையோ, உருவப் படமோ இல்லை. ஆனால் அவர்களின் உருவத் தோற்றத்தை நம் முன்னோர்கள் எழுத்து வடிவில் சித்தரித்துக் காட்டியதை வைத்து நம் மனக் கண் முன் அவர்களுடைய தோற்றத்தைப் படம் பிடித்துப் பார்த்துக் கொள்வது எளிதாகும். அந்த வகையில் அவர்களின் தோற்றத்தை ஓரளவு எழுத்தில் வடித்துக் காட்டுகிறோம்:

அண்ணலாரின் தோற்றம்:

அண்ணலார் அதிக உயரமுமில்லாது, அதிகக் குள்ளமாயுமில்லாது மத்திமமான நிலையிலிருந்தார்கள். தலை பெரிதாக இருந்தது; தலை முடி அடர்த்தியாயிருந்தது; அந்த முடிகளில் 20 அல்லது 25—முடிகள் வெள்ளையாக இருந்தன. முகம் வட்டமாகவும், அழகு நிறைந்ததாகவும், அருள் மிகுந்ததாகவும் இருந்தது. பதினாலாம் பிறை

போன்று அவர்களின் முகம் தோற்றமளித்தது என்று அவர்களைப் பார்த்த பலர் தெரிவித்துள்ளனர். அவர்களின் வியர்வையில் ஒரு வகையான சுகந்த மணம் வீசிக் கொண்டிருந்தது.

நபித்துவ முத்திரை!

அண்ணலாரின் இரு தோள்களின் நடுவில் வலது பக்க ஓரமாக ரோஜா நிறத்திலான புறா முட்டையின் வடிவத்தில் ஒரு சதைத் துண்டு துருத்திக் கொண்டிருந்தது. அதன் மேல் மெல்லிய கோட்டில் 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற எழுத்துக்கள் இலேசாகத் தெரிந்து கொண்டிருந்தன.

தாடியின் அமைப்பு

அண்ணலார் தாடியை வளர்த்து, மீசையைக் கத்தரித்துக் கொண்டிருந்தார்கள்; அடர்த்தியான அவர்களின் தாடி முடியின் நீளம் அளவிற்கு மீறி நீண்டு விட்டால் அதனைக் கத்தரித்து விடுவார்கள். 'தாடியைச் சிரைப்பது இணை வைப்பவர்களின் வழக்கம்!' என்று அண்ணலார் குறிப்பிட்டுள்ளார்கள். பொதுவாக தாடி வளர்ப்பது எல்லா நபிமார்களின் பழக்கமாயிருந்து வந்துள்ளது. தாடி வைத்திருப்பவர்கள் ஒரு கூட்டமாக நின்றால் அந்தக் காட்சி பார்ப்பதற்கே மிக அழகாக இருக்கும். பெண்களுக்கு தாடி முளைத்தால் அதனைச் சிரைப்பது அவர்கள் பேரில் கட்டாயக் கடமையாக உள்ளது.

அண்ணலாரின் ஆடை!

அண்ணலார் எப்பொழுதுமே மிகச் சாதாரண உடைகளை அதிகம் விரும்பி உடுத்திக் கொள்வார்கள். இடையில் ஒரு லுங்கி, ஒரு சட்டை, அதற்கு மேலாக ஒரு ஜுப்பா, ஒரு போர்வை, ஒரு கம்பளி ஆகியனவே அவர்களின் வழக்கமான] ஆடைகளாகும். பச்சை நிற ஆடைகளை அண்ணலார் அதிகம் விரும்புவார்கள். அந்த ஆடைகளில் பல ஒட்டுகள் போடப்பட்டிருக்கும்.

போர்வை:

'யமன் நாட்டுப் போர்வை' என்று அந்தக் காலத்தில் மிகவும் அதிகம் புழக்கத்திலிருந்தது. அதன் மீது பச்சை, சிவப்புக் கோடுகள் போடப்பட்டிருக்கும். வெறும் சிவப்பு நிற ஆடைகளை அண்ணலார் வெறுத்து வந்தார்கள்.

தொப்பி:

அண்ணலார் அணிந்து வந்த தொப்பிகள் தலையை ஒட்டினாற் போலவே இருக்கும்; உயரமான தொப்பிகளை அண்ணலார் உபயோகித்ததில்லை. அவர்களின் தோழர்கள் உபயோகித்து வந்த தொப்பிகளும் தலையை ஒட்டியேஇருந்தன.

தலைப்பாகை:

அண்ணலார் தலையில் தொப்பி வைத்த பிறகுதான் அதன் மீது தலைப்பாகை கட்டிக் கொள்வார்கள். தொப்பி யில்லாது தலைப்பாகை மட்டும் பழக்கம் இணை வைப்பவர் களிடமிருந்து வந்தது.

பாஜாமா (கால் சட்டை)

மினா கடை வீதியில் 'பாஜாமா' விற்கப்படுவதைக் கண்ட அண்ணலார் 'வெட்கஸ்தலத்தை மறைக்க சிறந்த ஆடை' என்று பாராட்டி வாங்கவும் செய்தார்கள். ஆனால் உபயோகித்ததற்கான ஆதாரமில்லை.

கமீஸ் (சட்டை);

இதன் அமைப்பு அண்ணலாருக்கு மிகப் பிடித்தமாயிருந்தது; இதில் பாக்கெட் மார்பின் மீது தைக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில் அதிலுள்ள பொத்தான்களை உபயோகிக்க மாட்டார்கள்.

லுங்கி:

அண்ணலார் கரண்டைக் கால் தெரியும்படியே லுங்கியைக் கட்டுவார்கள்; நடந்தால் பின்னங் கால் தெரியும்.

கால் மேலுறை (ஸாக்ஸ்)

அண்ணலார் காலுறையும் அணிவார்கள்; 'ஒலு' செய்யும் பொழுது அதன்மேல் 'மஸஹ்ஹு' செய்து கொள்வார்கள்.

படுக்கை;

அண்ணலாரின் படுக்கை ஈத்த மர இலையைக்கொண்டு முடையப்பட்டதாயிருந்தது; தோலினாலான தலையணை இருந்தது; அதற்குள் பேரீத்த சருகுகள் நிரப்பப்பட்டிருந்தன.

மோதிரம்:

அண்ணலார் வெள்ளியாலான மோதிரத்தை அணிந்திருந்தார்கள். அதன்மீது 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற சொற்கள் மூன்று வரிசையாகப் பொறிக்கப்பட்டிருந்தன. அரசர்களுக்குக் கடிதங்கள் எழுதப்படும் பொழுது முத்திரை இடுவதற்காகவும் இதனைப் பயன்படுத்தி வந்தார்கள்.

காலணி:

அண்ணலார் அணிந்து வந்த காலணிகள் கீழே ஒரே பட்டையாகவும், மேலே இரு வார்களும் கொண்டு அமைந்திருந்தன; அந்த இரு வார்களிலும் கால் விரல்களை மாட்டிக் கொள்வார்கள். — ஆதாரம்; ஜுர்கானி

கண்கள்;

அண்ணலாரின் கண்கள் பெரிதாக இருந்தன; விழிகளில் கறுமையும், வெளிர் சிவப்பும் கலந்திருந்தன! கண்களில் ஒரு தனிப் பிரகாசம் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர்களின் கண்களை நேருக்கு நேராகப்பார்ப்பவர்களின் கண்கள் கூசும்!

புருவங்கள்:

புருவங்கள் அடர்ந்திராது அரைப் பிறை வடிவில் அழகாக நீண்டு அமைந்திருந்தன; இருபுருவங்களிடையே இடைவெளி இருந்தது.

நெற்றி:

அண்ணலாரின் நெற்றி அகன்றிருந்தது; அவர்கள் ஆச்சரியப்படும் சமயத்தில் அவர்களின் நெற்றி சற்று உயர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கும்.

மார்பு:

அண்ணலாரின் மார்பு அகன்றிருந்தது; அகன்ற மார்பு கொண்டவர்களை 'வீரர்'களென்றும், குறுகிய மார்புள்ளவர்களைக் 'கோழைகள்'' என்றும் அக்கால அறபிகள் கூறி வந்தனர். இக் காலத்திலும் கூட 'ஆணுக்கழகு அகன்ற மார்பு' என்று கூறப்படுவதுண்டு.

உமிழ் நீர்:

அண்ணலாரின் உமிழ் (எச்சில்) நீர் ஓர் அபூர்வ மருந்தாக இருந்தது. ஒரு தடவை ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய கண் வலியை இந்த உமிழ் நீர்தான் குணப்படுத்தியுள்ளது. ஹஜ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் கிணற்று உவர்ப்பு நீர் இனித்ததற்கும், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் பசியைப் போக்குவதற்கும், வற்றியிருந்த கிணற்றில் நீர் ஊற்று வந்ததற்கும் அண்ணலாரின் உமிழ் நீர்தான் காரணமாயிருந்தது.

சிரிப்பு:

அண்ணலார் எப்பொழுதும் புன் சிரிப்புடன்தான் காணப்படுவார்கள்; சில சமயங்களில் மட்டும் கடைவாய்ப்பற்கள் தெரியச் சிரித்துள்ளார்கள். வெடிச் சிரிப்பு, விழுந்து விழுந்து சிரிப்பு, சப்தத்துடன் சிரிப்பு ஆகியன அவர்களிடமில்லை.

குரல்:

அண்ணலாருக்கு இருந்த இனிமையான குரல் நபிமார்கள் உட்பட எந்த மனிதருக்கும் இருக்கவில்லை; 'கணீ' ரென்று ஒலிக்கும் அந்தச் சொற்கள் சபையிலிருப்போர் அனை

வரின் காதுகளிலும் ஒலிக்கும் சக்தி பெற்றிருந்தது. இறுதி ஹஜ்ஜின் பொழுது அவர்களின் பேருரையை அரஃபாத் மைதானத்தில் சுமார் ஒன்றே கால் இலட்சம் மக்கள் நன்கு விளங்கக் கேட்டார்கள் என்றால் அந்தக் குரலின் அபார சக்தியை என்னென்று கூறுவது?

கழுத்து:

அண்ணலாரின் கழுத்து மிக அழகாகவும், வெண்மையாகவும் இருந்தது; மான் குட்டியின் கழுத்து எவ்வளவு மென்மையாகவும், கவர்ச்சியாகவும் இருக்குமோ அதே மாதிரி இருந்தது அண்ணலாரின் கழுத்தும்.

மார்பின் முடி:

அண்ணலாரின் மார்பில் முடி அடர்த்தியாக இல்லாது மார்பின் நடு பாகத்திலிருந்து தொப்பூழ் வரை இலேசான முடிகள் சீராக இருந்தன, மார்பின் இரு பகுதியும் முடியில்லாதிருந்தன.

கக்கம் (அக்குள்):

பொதுவாக எல்லோருக்கும் உடலின் நிறம் கக்கத்திலிராது சற்று மாறுபட்டே இருக்கும். ஆனால் அண்ணலாரின் கக்கம் உடல் நிறத்தை போன்றே வெண்மையாக இருந்தது. அவர்களின் கக்கத்தில் முடி முளைக்கவில்லை.

முதுகு:

அண்ணலாரின் முதுகு வெண்மையாகவும், மிகவும் அழகாகவும் இருந்தது.

கைகள்:

அண்ணலாரின் கை, உள்ளங்கை, மணிக்கட்டு, விரல்கள் எல்லாமே மிக அழகாக வெண்மை நிறத்துடனிருந்தன. அவை தொட்டுப் பார்க்க மிகவும் மிருதுத் தன்மையுடனிருந்

தாலும், மிகவும் வலுவாக இருந்தன. பிறர்மீது அவை படும் பொழுது குளிர்ந்திருந்ததைப் பலர் அனுபவித்துள்ளனர்.

கால்கள்:

அண்ணலாரின் கால்கள் மிருதுவாக இருந்தன; பாதங் களும், கால்களின் விரல்களும் மிக அழுத்தமாக இருந்தன. இரண்டு கால்களும், அவற்றின் விரல்களும் எந்தக் குறை வின்றிச் சீராக இருந்தன.

பின்னங் கால்கள்:

அண்ணலாரின் இரு பின்னங்கால்களும் தடித்திராது, சதை பிடிப்பு அதிகமின்றி இருந்தன. நிறம் வெண்மையாக இருந்தது.

நடை;

அண்ணலார் நடக்கும்பொழுது கீழ்நோக்கியவாறே நடப் பார்கள்; மேட்டிலிருந்து கீழே இறங்குவதைப்போன்றே நடப் பார்கள்; பூமியின் மீது முழு பாதத்தையும் பதிய வைத்து நடப்பார்கள்.

நிழல்:

அண்ணலார் நடந்தால் நிழல் விழாதிருந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை; 'ஒளிக்கு நிழலேது?' என்ற கருத் தில் அவ்வாறு அன்பு காரணமாக மிகைப்படுத்திக் கூறப்பட்டி ருக்கலாம். சந்திரன், சூரியன், விளக்கு ஆகிய ஒளி எல்லாம் அவர்கள்மீது படும்பொழுது அவர்களின் நிழல் விழுந்திருக் கிறது.

ஆண்மை - வீரியம்:

அண்ணலாருக்கு 11.மனைவிகள் இருந்தனர்; தேவைப் படும்பொழுது அத்தனை மனைவிமார்களுடனும் பேசி வரு வார்கள்; அவர்களுக்கு அல்லாஹ் 100-ஆண்களுக்குத் தேவை

யான வீரியத்தை அருளியிருந்தான். அவர்களுக்கு என்றுமே 'ஸ்கலிதம்' ('இஹ்திலாம்') ஏற்பட்டதில்லை. (கனவில் விந்து வெளிப்பட்டதில்லை.)

மல - ஜலம்

அண்ணலாரின் மல—ஜலத்தை யாரும் பார்த்ததில்லை. அல்லாஹ்வின் தூதர்களின் மல—ஜலத்தை பூமி விழுங்கி விடுவதாக அண்ணலாரே கூறியுள்ளார்கள். அவை பட்ட இடம் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

— ஆதாரம்: ஷமாயிலே திர்மிதீ

அண்ணலாரைத் தவிர இப்பரந்த உலகில் எந்த ஒரு தனி மனிதரைப் பற்றிய இத்தகையத் தகவல்களை யாரும் அறிவிக்கவில்லை. அண்ணலாரைப் பற்றிய இத்தகைய இன்னும் பல தகவல்கள் ஆதாரத்துடன் பல நூறுகள் உள்ளன.

5. அண்ணல் நபியின்

பொருளடக்கம்

''முஹம்மத் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஒரு தூதரேயன்றி, (இறக்காமல் இருக்கக்கூடிய அல்லாஹ்) அல்ல! அவருக்கு முன்னரும், இவ்வாறே) தூதர்கள் புலர் சென்றிருக்கின்றனர். அவர் இறந்து விட்டால், அல்லது வெட்டப்பட்டு விட்டால், நீங்கள் புறங்காட்டிச் சென்று விடுவீர்களோ? (அவ்வாறு) எவரேனும் புறங்காட்டிச் சென்றுவிட்டால், அதனால் அவன் அல்லாஹ்வுக்கு ஒன்றும் தீங்கிழைத்துவிடமாட்டான். நன்றியறிவோருக்கு அல்லாஹ் அதிசீக்கிரத்தில் நற்கூலியைத் தருவான்.''

— அல்குர்ஆன், அத்தியாயம்-3, வசனம்,144

''அல்லாஹ்வின் தூதர்களுடைய அடக்க ஸ்தலங்களை வணங்கும் யூதர்கள், கிறிஸ்துவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகுவதாகுக. அவர்களைப்போல நீங்களும் (முஸ்லிம்களும்) என்னுடைய அடக்க ஸ்தலத்தை வணங்காதிருக்க எச்சரிக்கிறேன். என்னுடைய மரணத்தைப் பற்றி அஞ்சாதீர்கள்! எந்தத் தூதரும் தங்களைப் பின் தொடருபவர்களோடு சதா உயிரோடு இருந்ததில்லை. நான் அல்லாஹ்வைச் சந்திக்கப் போகிறேன்; நீங்களும் அல்லாஹ்வைச் சந்திக்கத்தான் போகிறீர்கள்!''

— அண்ணல் நபி (ஸல்-அம்)

''மரணம்தான் உன் முடிவு என்றால் மகிழ்ச்சிக்கு இடமேது? உண்மையான இன்பம் மறுமையின் இன்பமே! உலகம் ஒரு சந்தையைப் போன்றது; வெகு விரைவில் அது அடைப்பட்டு விடும். அல்லாஹ்வைத் தவிர யாரையும் நம்பாதே! அல்லாஹ்வைவிட்டு அடுத்தவர்கள் முன் கை ஏந்துபவன் அல்லாஹ்வின் தகுதியை அறிந்து கொள்ளாதவன்.''

— ஹஜ்ரத் கவுதுல் அஃளம் (ரஹ்)

''பெருமைசேர் நபிகள் நாதர்
பிரிந்ததை எண்ணி ஏங்கி
வருந்துகின் றாயோ நெஞ்சே?
வாடுகின் றாயோ? நெஞ்சே!''
— மவுலவி பாஜில் ஜி. எம். ஸிராஜ் பாகவி

ஹிஜ்ரீ—11 ஸஃபர் மாதம் கடைசி பத்து நாட்கள்,

ஒரு நாள் இரவு; அண்ணலார் திடீரென்று எழுந்து மதீனாவிலுள்ள 'ஜன்னத்துல் பகீஃ' கப்ருஸ்தானுக்குச் சென்று அங்கு அடக்கமானவர்களின் பாவமன்னிப்பிற்காக 'துஆ' செய்து விட்டு அன்றையத் தினமுறை வழக்கப்படி ஹஜ்ரத் மைமூனா (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு வந்தார்கள், அன்று புதன் கிழமையாக இருந்தது. அண்ணலாருக்குக் கடுமையான ஜுரமும், தலைவலியும் கண்டிருந்தது. தொடர்ந்து முறைப்படி எல்லா மனைவிமார்களுடைய வீட்டிற்கும் சென்று வந்தார்கள். ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய வீட்டில் வந்து தங்கும் முறை வந்ததும், அவர்களின் நோயின் கடுமை அதிகரிக்கவாரம்பித்து விட்டது. எனவே சுமார் இரண்டு வாரக் காலம்வரை அங்கேயே தங்கிக் கொண்டார்கள்.

அண்ணலாரின் இறுதி மூன்று உபதேசங்கள்!

நோயுற்றிருந்த காலத்தில் அண்ணலார் அடிக்கடி பாவ மன்னிப்புக்கோரி 'துஆ' செய்த வண்ணமும், அல்லாஹ்வைப் புகழ்ந்த வண்ணமும் இருந்தார்கள். மூன்று 'குல்' அத்தியாயங்களை அதிகம் ஓதிக்கொண்டிருந்தார்கள். உடல் நலமில்லாத நிலையில் அண்ணலார் தங்களின் அருமை மகளார் ஹஜ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை அழைத்து தாங்கள் விரைவில் மரணமாகி விடப் போவதை அறிவித்ததும், மகளார் அழவாரம்பித்து விட்டார்கள்; தங்களின் குடும்பத்தாரில் ஹஜ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள்தாம் தங்களை முதலில் சந்திக்கவிருப்பதாக அண்ணலார் அறிவித்ததும், பாத்திமா (ரலி) அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஒரு

சமயம் தாம் கூறும் போதனைகளைக் குறித்து வைத்துக் கொள்ளுமாறு அண்ணலார் தங்களின் தோழர்களைப்பணித் தார்கள். அச்சமயத்தில் அண்ணலாருக்குச் சிரமம் தரக் கூடாது என்ற கருத்தில் தோழர்களில் அபிப்பிராயப் பேத மேற்பட்டு தங்களிடையே தர்க்கம் செய்து கொள்ளவாரம் பித்தனர். அல்லாஹ்வின் தூதர் முன் இப்படித் தர்க்கித் துக் கூச்சலிடுவது சரியல்ல என்று அண்ணலார் எச்சரித்த தும் எல்லோரும் மவுனம் சாதித்துக் கொண்டார்கள். பிறகு அண்ணலார் கீழ்வரும் மூன்று உபதேசங்களைச் செய்தார்கள்;

1. ''அறபுத் தீவிலிருந்து இணை வைப்பவர்களை அப்புறப்படுத்தி விடுங்கள்.

2. ''தூதர்கள் வந்து போகும் பொழுது அவர்க ளுக்குப் பரிசுகளைக் கொடுத்துக் கவுரவத்துடன் அனுப்பி வையுங்கள்.''

3. ''திரு குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி செயல் பட்டு வாருங்கள்.''

அண்ணலாரின் இந்த அரிய உபதேசங்களைக் கேட்ட பின் எல்லோரும் கலைந்து சென்று விட்டனர். பிறகு அண்ண லார், ஏழு தோல் பைகளில் தண்ணீர் வரவழைத்துக் குளித்தார்கள். அதனால் சிறிது சுகம் தெரிந்ததும் ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி), ஹஜ்ரத் அலீ (ரலி) ஆகிய இருவரை யும் துணையாக வைத்து மஸ்ஜிதுக்குச் சென்று 'லுஹர்' தொழுகையைத் தொழ வைத்தார்கள். பிறகு மக்களுக்கு இறுதி உபதேசம் செய்யத் தயாரானார்கள். அன்று வியா ழக் கிழமையாயிருந்தது. இது நடந்தது அண்ணலார் இவ் வுலகை விட்டு மறைவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னா தாகும்.

—ஆதாரம்: 'ஜுர்கானி'

அண்ணலாரின் இறுதிச்சொற்பொழிவு!

தொழுகையை முடித்துக் கொண்ட அண்ணலார் மிம்பர் படி மீது அமர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கு நல்லுபதேசம்

('குத்பா') செய்யவாரம்பித்தார்கள். இதுவே அண்ணலாரின் கடைசி உபதேசமாயிருந்தது. முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து கூறிவிட்டு தங்களின் 'உஹத்' தோழர்களுக்கான சில விஷயங்களை விளக்கினார்கள். உஹத் போரில் 'ஷஹீ'தாகி விட்டவர்களுக்காக 'துஆ' செய்தார்கள், பிறகு மக்காவிலிருந்து வந்த 'முஹாஜிர்' முஸ்லிம்களைப் பார்த்து "நீங்கள் எண்ணிக்கையில் 'அன்ஸாரி' (மதீனாவாசி)களை விட அதிகமாக இருக்கிறீர்கள். அன்ஸாரிகள் எனக்காகப் பல தியாகங்களைச் செய்தவர்கள். அவர்கள் ஏதேனும் தவறு செய்து விட்டாலும் அவர்களை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லி விட்டு அவர்கள் மேலும் கூறியதன் கருத்தாவது:

"ஓ மக்களே! அல்லாஹ் உங்களுக்கு முழு சுதந்திரமளித்துள்ளான்; இம்மை—மறுமை இரண்டிலும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் நிறைந்துள்ளன. நீங்கள் மறுமையின் அருட்கொடைகளை அதிகம் விரும்பிச் செயல்படுங்கள். எல்லோரின் உதவிகளுக்கும் நான் பதில் செய்து விட்டேன். ஆனால் அபூ பக்கருடைய உதவிகளுக்கு மறுமையில் அல்லாஹ்வால்தான் கூலி தர முடியும்! நான் உங்களுக்கு முன்னதாகப் போக இருக்கிறேன். என்னை நீங்கள் 'கவுதர்' தடாகத்தில் வந்து சந்தியுங்கள்!"

இவ்வாறு கூறி விட்டு அண்ணலார் தங்களின் தங்கும் அறைக்குச் சென்று விட்டார்கள்.

—ஆதாரம்: 'அல்பிதாயா'

அண்ணலாருக்குப் பதில் ஹழ்ரத் அபூ பக்கர் (ரலி) தொழ வைத்தார்கள்!

அண்ணலாருக்குத் தெம்பு இருந்தவரை அவர்களே இமாமாக இருந்து தொழ வைத்துக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக் கிழமை அன்று அண்ணலார் மிகவும் பலஹீனமான நிலைக்கு உள்ளானார்கள். அவர்களால் எழுந்து உட்காரவோ, நிற்கவோ முடியாது போய்விட்டது. 'இஷா'

தொழுகை நேரம் வந்து விட்டது. 'எல்லோரும் தொழுது விட்டீர்களா?' என்று கேட்டார்கள் அண்ணலார்.

'அல்லாஹ்வின் தூதரே! எல்லோரும் உங்கள் வருகைக் காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்!' என்று பதில் கூறப் பட்டது.

பல தடவை அண்ணலார் எழுந்திருக்க முயன்றார்கள்; அடிக்கடி மயக்க நிலை ஏற்பட்டுக் கொண்டிருந்ததால் 'என் சார்பில் அபூ பக்கரை நிறுத்தித் தொழுது கொள்ளுங்கள்!' என்றார்கள்.

ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள் இமாமாக நின்று தொழ வைப்பதை ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் விரும்ப வில்லை. அவர்கள் மிகவும் இளகிய மனதுள்ளவர்கள்; அவர் களால், அண்ணலார் நின்ற இடத்தில் நிற்கவோ, தொழ வைக்கவோ முடியாது போய்விடும்! எனவே ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களைத் தொழ வைக்குமாறு உத்திரவிடுமாறு அண்ணலாரை வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அண்ண லார் அதற்குச் சம்மதியாது ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களையேதொழவைக்குமாறு வற்புறுத்தினார்கள். இறுதி யில் ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களே அந்நேரத் தொழுகையை தொழ வைத்தார்கள்.

தோழர்கள்மீது அண்ணலாரின் இறுதிப் பார்வை!

ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீடு மஸ்ஜிதை ஒட்டியே இருந்தது; அண்ணலாரின் இறுதி நாட்கள் அங்கு தான் கழிந்து கொண்டிருந்தன.

திங்கள் கிழமை: 'பஜ்ர்' தொழுகை நேரம்.

அண்ணலார் திரையைச் சற்று நீக்கி மஸ்ஜிதுக்குள் பார்த்தார்கள்; நாயகத் தோழர்கள் அனைவரும் தொழுகை யில் மூழ்கியிருந்ததைக் கண்டு புன்முறுவலித்தார்கள். அவர் களைக் கண்டதும் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அண்ணலாருக்காக வழி விடச் சற்றுப் பின்னே நகர்ந்தார்

கள். அண்ணலார், அவர்களுக்குத் தொழுகையைத் தொடரு மாறு ஜாடை காட்டி விட்டு அதற்கு மேல் அவர்களால் நிற்க முடியாது போனதால் நீக்கிக் கொண்டிருந்தத் திரையை விட்டு விட்டார்கள். தங்களின் தோழர்கள் அனை வரையும் அண்ணலார் இறுதியாகப் பார்த்த பார்வையாக அது இருந்து விட்டது.

'பஜ்ர்' தொழுகையை முடித்துக் கொண்ட ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள் அண்ணலார் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள். அப்பொழுது அண்ணலார் மிக அமைதி யாகப் படுத்திருந்ததைப் பார்த்து தங்கள் வீடு வரைச் சென்று வர அண்ணலாரிடம் விடை பெற்றுத் தம் வீட்டிற் குச் சென்று விட்டார்கள். —ஆதாரம்: 'அல்பிதாயா'

அண்ணலாரின் இறுதிச் சொல்!

அண்ணலார் நிம்மதியாகப் படுத்திருக்கிறார்கள் என்ற தகவல் தெரிந்ததும் தோழர்கள் அனைவரும் தத்தம் இல்லங் களை நோக்கிச் செல்லவாரம்பித்தனர். எல்லோரும் சென்று விட்ட பின் அண்ணலாரின் உடல் நிலை மீண்டும் சீர் கெட வாரம்பித்தது. அப்பொழுது அண்ணலார் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மடியின் மீது தலை வைத்துப் படுத்திருந் தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களின் சகோதரர் ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் தம் கையில் 'மிஸ்வாக்' குச்சியை வைத்திருந்தார்கள். அண்ணலார் அக் குச்சியை மிகவும் பிரியத்துடன் பார்த்தார்கள். அவர்களின் குறிப்பை யுணர்ந்து கொண்ட ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த 'மிஸ்வாக்' குச்சியைப் பெற்றுத் தம் பற்களில் வைத்துக் கடித்து அதனைச் சிறிது மிருதுவாக்கி அண்ணலாரிடம் கொடுத்தார்கள். அண்ணலார் அதனைச் சற்றுப் பயன்படுத் திக் கொண்டார்கள்.

அண்ணலாரின் அருகில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது; அதிகச் சிரமத்தின் காரணமாக அண் ணலார் அடிக்கடி அத் தண்ணீர் பாத்திரத்தில் தங்கள் திருக்

கரங்களை நனைத்துத் தங்களின் திரு முகத்தின் மீது தடவிக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை; உண்மையில் மரணத்தின்கஷ்டம் அதிகமாகத்தானிருக்கிறது" என்று கூறிக்கொண்டே வான் பக்கம் கையை உயர்த்தி, "யா அல்லாஹ்! என்னுடைய இடத்திற்கு நான் போக விரும்புகிறேன்!" என்று கூறிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக அண்ணலார் 'அல்லாஹும்ம ஃபிர் ரஃபீகில் அஃலா' என்று கூறினார்கள். அவர்களின் திருக் கரங்கள் கீழே தணிந்து விட்டன. அவர்களுடைய புனித ஆத்மா அவர்களின் பூத உடலை விட்டுப் பிரிந்து விட்டது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்தே வந்துள்ளோம்; அவன் பக்கமே மீளுவோம்.)

—ஆதாரம்: 'புகாரீ ஷரீப்'

அஸ்தமித்துவிட்ட ஞான சூரியன்!

அந்தகாரத்தை அழிக்கக் கிளம்பிய அந்த ஞான சூரியன்; மடைமையையும், மவுடீகத்தையும் ஒழிக்க முளைத்த அந்த அற்புத ஜோதி; மாக்களை மக்களாக்கி, மாந்தரிடையே மகத்தான மறுமலர்ச்சியைப் பூக்க வைத்த அந்த மணிச் சுடர்; பெண்மையின் மென்மையை விளக்கி, அடிமைத் தளையை அறுத்தெறிந்த அந்த நந்தா விளக்கு; 'கல்லும், மண்ணும், மரமும், நெருப்பும் கடவுள் ஆகார்! படைத்தவன் தனித்தவன்! அவனுக்கு இணை அவனேதான்!' எனச் சங்க நாதம் முழங்கிய அந்தச் சத்திய ஒளி; கல்வி கற்காதிருந்தும், கற்ற மேதாவிகளுக்கெல்லாம் கல்விக் கடலாய் வழி காட்டி ஒளிர்ந்த அந்த அறிவூற்று வற்றி விட்டது! அணைந்து விட்டது! அஸ்தமித்து விட்டது! உலக மாந்தர்க்கெல்லாம் ஏற்பட்ட மாபெரும் நஷ்டம்! ஐயகோ! ஐயகோ!! ஈடு, இணை செய்ய முடியாத மாபெரும் கைசேதம்! அந்தோ! அந்தோ!

அண்ணலார் இவ்வுலகைப் பிரிந்தது ஹிஜ்ரீ-11 ரபீஉல் அவ்வல் மாதம் 12-ஆம் தேதி திங்கள் கிழமை முற்பகல்

('சாஷ்த்') நேரம். கி.பி. 632 ஜூன் மாதம் எட்டாம் தேதி. (இந்திய நேரப்படி பிற்பகல் 11-மணி.) அண்ணலாரின் வயது அப்பொழுது 63.

—ஆதாரம்: 'ஃபத்ஹுல் பாரி'

அண்ணலாரின் மறைவு! தோழர்களின் நிலை குலைவு!

அண்ணலாரின் மறைவுச் சேதி எட்டுத் திக்கிலும் மின்னல் வேகத்தில் பரவிவிட்டது. மதீனா நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. சேதி கேட்பவர்களெல்லாம் கல்லாய்ச் சமைந்து நின்றனர். ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் செயலிழந்து போய்ச் சுவற்றில் சாய்ந்து திக்பிரமை பிடித்தவர்களைப் போல உட்கார்ந்து விட்டார்கள். ஹஜ்ரத் அலி (ரலி) விறிட்டலறியவண்ணம் மூர்ச்சையுற்று கீழே சாய்ந்து விட்டார்கள். அண்ணலாரின் அருமை மனைவிமார்களின் நிலையோ விவரிக்கவியலாது போய் விட்டது. அண்ணலாரின் தந்தையுடைய சகோதரரான ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பேயறைந்தவர்களாகி விட்டார்கள். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களோ நிலைகுலைந்துபோய் வாளையுருவிக் கொண்டு ஆக்ரோஷத்துடன், "யார் கூறியது அண்ணலார் மறைந்து விட்டதாக? அப்படிக் கூறுபவர்களெல்லாம் நயவஞ்சகர்களே! அண்ணலார் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களைப்போல அல்லாஹ்வைச் சந்திக்கப் போயிருக்கிறார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர்கள் மீண்டும் உயிர்பெற்று நம்மோடு இருப்பார்கள்! அவர்கள் மரணமாகி விட்டார்கள் என்ற வதந்தியைப் பரத்திய வஞ்சகர்களின் கோட்டையைத் தவிடு பொடியாக்குவார்கள்!" என்று கர்ஜிக்கவாரம்பித்து விட்டார்கள்.

அச்சமயம் ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள் அங்கில்லை, அண்ணலாரிடம் உத்திரவு பெற்று அன்று காலைதான் தங்கள் வீடு சென்றிருந்தார்கள். அவர்களின் வீடு சற்றுத் தொலைவிலிருந்தது. அண்ணலாரின் மறைவுச் சேதி கேட்டதும் பதறிப் போய் குதிரை மீதேறி அண்ணலார்

வீட்டை நோக்கி வெகு வேகமாக வந்து சேர்ந்தார்கள். அவர்களின் மகளார் வீட்டில்தான் அண்ணலார் நீங்காத் துயில் கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களைக் கண்டதும், ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைத் தவிர, அண்ணலாரின் மற்ற மனைவிமார்கள் தங்கள் முகங்கள் மீது திரையிட்டுக் கொண்டார்கள்.

மரணம் எவரையும் விட்டு வைக்கவில்லை!

ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள் அண்ணலாரின் முகத்தின் மீதிருந்த துணியை நீக்கி அண்ணலாரின் புனித நெற்றியை முத்தமிட்டுக் கண்ணீர் வடித்து விட்டு ''என்னுடைய பெற்றோர்கள் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்; அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவன் இரண்டு தடவை உங்களுக்கு மரணத்தைச் சுகிக்க வைக்க மாட்டான்'' என்று கூறி விட்டு வெளியே வந்தார்கள். அங்கு வெளியே ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் மெய் மறந்த நிலையில் மிகுந்த ஆக்ரோஷத்துடன் வாளை உருவிக் கொண்டு நிற்பதைக் கண்டதும் ''உமரே! அல்லாஹ்வின் அந்த அருள் வாக்கை மறந்து விட்டீரோ?' என்று கேட்டு விட்டுக் கீழ்வரும் திருகுர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்:

> (''நபியே!) உமக்கு முன்னர் எம் மனிதருக்குமே நாம் மரணமற்ற வாழ்க்கையை ஏற்படுத்தவில்லை! ஆகவே நீர் இறந்து விட்ட பின்னர் இவர்கள் என்றென்றும் வாழ்ந்திருக்கப் போகிறார்களா?''
>
> —அத்.21, வசனம்-34

இதனைக் கேட்டதும் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் சற்று நிதானம் பெறலாரம்பித்தார்கள்; கூடியிருந்தவர்களும் சற்று அமைதியடைந்தனர். பிறகு ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்கள் மஸ்ஜிதுக்குள் சென்று மிம்பர் படி மீது ஏறிக் கொண்டு எல்லோரையும் தங்கள் முன்னால் வந்து அமரும்படி உரத்தக் குரலில் கூறினார்கள்.

அல்லாஹ்தான் மரணிக்காதவன்!

குழப்பத்திலிருந்த மக்களை எல்லாம் ஒரு சேரத் திரளச் செய்தபின் அவர்களைப் பார்த்து "நீங்கள் அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாக இருந்தால் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! அவனுக்கு மரணமில்லை; அவன் நித்திய ஜீவனுள்ளவன்! நீங்கள் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்-அம்) அவர்களை ஒரு வேளை வணங்குபவர்களாயிருந்தால் அறிந்து கொள்ளுங்கள்! அவர்கள் முந்தினத் தூதர்களைப் போலவே மரணித்து விட்டார்கள்!" என்று கூறி, திருகுர்ஆனின் மூன்றாம் அத்தியாயத்திலுள்ள 144-ஆம் வசனத்தை ஓதிக் காட்டி, "நாமெல்லோரும் மரணிக்கக் கூடியவர்களே! இறுதித் தீர்ப்பு நாளன்று நம் செயலுக்கேற்ற கூலியை அல்லாஹ் தருவான். அண்ணலார் நமக்கு எல்லா விஷயங்களையும் விளக்கிக் காட்டி விட்டார்கள். ஓ! மக்களே! அல்லாஹ்வைக் கொண்டு பயந்து கொள்ளுங்கள். அவனை முற்றிலுமாக நம்பிச் செயல்படுங்கள். அவனுடைய இந்த மார்க்கத்தில் உறுதியாக நிலைத்து நின்று கொள்ளுங்கள்! இஸ்லாத்தின் விரோதிகளை எதிர்த்துப் போராடுவதில் சளைக்காதீர்கள்!" என்று கூறினார்கள்.

—ஆதாரம்; 'ஜுர்ஜானி', 'தபகாத்'

ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களின் இந்தப் பேருரையைக் கேட்ட பிறகுதான் எல்லோருக்கும் அண்ணலாரின் மறைவில் நம்பிக்கை ஏற்பட்டது.

அண்ணலாரின் முதல் பிரதிநிதி!

அன்று மாலை: அன்ஸாரிகளாகிய மதீனாவாசிகள் 'பனீ ஸாஅதா' என்ற இடத்தில் கூடி 'அண்ணலாரின் மறைவுக்குப் பிறகு முஸ்லிம்களுக்குத் தலைமை வகித்து யார் செயல்படுவது?' என்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தார்கள். இத்தகவலையறிந்ததும் மக்காவாசிகளான முஹாஜிரீன்களும் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள விரைந்தார்கள். மக்காவாசிகள் சார்பில் ஒரு

வரும், மதீனாவாசிகள் சார்பில் ஒருவரும் ஆக இருவர் இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தலாம் என்ற யோசனை கூறப்பட்டது. இது பெரும் பிரச்சினைகளையும், பல குழப்பங்களையும் தரும் என்று பலர் எடுத்துக் காட்டினர். ''அண்ணலாரை அடக்கம் செய்வதற்கு முன், 'யார் பொறுப்பாளர்?' என்பதை முடிவு செய்து கொள்வதே நல்லது; இன்றேல் இஸ்லாத்தின் எதிரிகள் ஏதேனும் விபரீதமாகச் செய்யச் சந்தர்ப்பம் அடைந்து கொள்வார்கள். யாரேனும் ஒரு நல்ல மனிதரைப் பொறுப்பாளராக உடனே நியமித்துக் கொள்வது மிகவும் நல்லது!' என்ற கருத்தை ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வற்புறுத்தினார்கள். எல்லோரும் ஒரே குரலாய் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களே அண்ணலாரின் பிரதிநிதியாக ('கலீபா'வாக) இருக்க வேண்டுமென்று கூறினார்கள். அவர்கள் ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ள மிகவும் உறுதியாக மறுத்தார்கள். எல்லோரின் வற்புறுத்தலின் பேரில் வேறுவழியின்றிச் சம்மதித்தார்கள். பிறகு எல்லோரும் ஹஜ்ரத் அபூ பக்கர் (ரலி) அவர்களிடம் உறுதிமானம் ('பைஅத்') செய்து கொண்டனர்.

தரித்திருந்த உடையோடு குளிப்பாட்டப்பட்டது!

பிரதிநிதிப் பிரச்சினை முடிவடைந்ததும் அண்ணலாரை எப்படிக் குளிப்பாட்டுவது? எப்படிக் கபனிடுவது? எங்கு அடக்கம் செய்வது? யார் பொறுப்பு எடுத்துக் கொள்வது என்ற பிரச்சினைகள் எழுந்தன. இந்த விஷயங்களில் அண்ணலாரின் குடும்பத்தினரை வைத்து முடிவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. அண்ணலாருடைய புனித உடலைக் குளிப்பாட்ட ஹஜ்ரத் அலீ (ரலி), ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி), அவர்களின் இரு குமாரர்களான ஹஜ்ரத் ஃபழ்ல் (ரலி), ஹஜ்ரத் கஸம் (ரலி), மற்றும் இதர குடும்ப உறுப்பினர்களான ஹஜ்ரத் உஸாமா (ரலி), ஹஜ்ரத் ஷக்ரான் (ரலி) ஆகியோர் தயாரானார்கள். அண்ணலார் தரித்திருந்த உடை

யோடு அவர்களைக்குளிப்பாட்டினார்கள். மூன்றுதுணிகளைக் கொண்டு கபனிட்டார்கள்.

—ஆதாரம்; 'பிதாயா', 'இத்ஹாப்'

மதீனாவில் நுழைந்த அதே நேரத்தில் மரணமடைந்த அதிசயம்!

எங்கு அடக்கம் செய்வது? என்ற கேள்வி எழுந்த போது, ''எந்த இடத்தில் அல்லாஹ்வின் தூதர்கள் மரிக்கின்றார்களோ அதே இடங்களில்தான் அவர்கள் அடக்கமும் செய்யப்பட்டு வந்தார்கள்'' என்று அண்ணலார் ஒரு தடவை சொன்னதாக ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். அதன்படியே அண்ணலார் காலமான ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிலேயே அண்ணலாரை அடக்கம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஹஜ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் புதைகுழி (கப்ர்) தோண்டினார்கள். பிறகு சிறு சிறு கூட்டமாக எல்லோரும் உள்ளே நுழைந்து 'ஜனாஸா' தொழுகை தொழுது கொண்டார்கள். முதலில் ஆண்கள், பிறகு பெண்கள், பிறகு குழந்தைகள் ஜனாஸா தொழுகை தொழுதனர்.

அண்ணலார் திங்கள் கிழமை முற்பகல் இவ்வுலகை விட்டு மறைந்தார்கள்: இதே திங்கள் கிழமை முற்பகல் நேரத்தில்தான் அன்று அவர்கள் திரு மதீனா நகரில் நுழைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை; அண்ணலாரின் புனித உடலை ஹஜ்ரத் அலீ (ரலி), ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி), அவர்களின் இரு குமாரர்கள் ஆகிய நால்வரும் சேர்ந்து புதை குழிகள் இறக்கினார்கள். பிறகு மண்ணை நிரப்பி சமாதி வடிவமாக்கித் தண்ணீரைத் தெளித்தார்கள். நாயகத் தோழர்கள் அனைவரும் கண்ணீர் வடித்த வண்ணம் 'இன்னாலில்லாஹி' ஓதிக்கொண்டே கலைந்துசென்றார்கள்.

—ஆதாரம்; 'தபகாத்'

6. முடிவாகச் சில சொற்கள்!

அல்லாஹ் ஜல்ல ஷானுஹூ தஆலா இப்பூலகிற்குச் சுமார் ஓரிலட்சத்தி இருபத்தி நாலாயிரம் நபிமார்களை அனுப்பி வைத்தான், அண்ணல் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களை இறுதி நபியாகவும், எல்லா நபிமார்களின் தலைவராகவும் அனுப்பி வைத்தான். மற்ற நபிமார்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு, ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கு, ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மட்டுமே அனுப்பி வைத்தான். ஆனால் அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களையோ அகிலம் அனைத்திற்குமாக ஒரு பொது நபியாக அனுப்பி ஒரு பொது மறையாம் திருகுர்ஆனையும் அவர்கள்மீது அருளினான்.

அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களுக்கு அல்லாஹ் மற்றெந்த நபிமார்களுக்கும் தராத சில சிறப்பு அம்சங்களைத் தந்திருந்ததை அண்ணலாரே பின்வருமாறு விளக்கியிருக்கிறார்கள். அவை வருமாறு;

1. ''அல்லாஹ். எனக்கு முன்னால் அனுப்பிய எல்லா நபிமார்களையும் அவரவர்களின் சமுதாயத்திற்காக மட்டுமே அனுப்பி என்னை மட்டும் உலக மக்கள் அனைவருக்குமாக அனுப்பி வைத்தான்.

2. ''நான் எல்லா நபிமார்களுக்கும் இறுதி நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்; எனக்குப் பின் யாரும் நபியாக வர மாட்டார்கள்.

3. ''என்னுடைய வாயிலிருந்து வெளிப்படும் சொற்கள் மிகவும் குறைவாக இருக்கும். ஆனால் அவற்றில் பல கருத்துக்கள், பொருள்கள் பொதிந்திருக்கும். (அதாவது, இம்மை மறுமை ஈருலகிற்கும் பயன் தருவதாக இருக்கும்.)

4. ''என்னைப் பற்றிய அச்சம் எவ்வித உபகரணங்களு மின்றி எதிரிகளின் உள்ளங்களிலிருந்து வந்தது: இந்த அச்சம் ஒவ்வொரு தடவையும் ஒரு மாத காலம் வரை நீடித்திருக் கும். இது அல்லாஹ் மூலம் எனக்குக் கிடைத்த உதவியும், வெற்றியுமாகும்.

5. ''எனக்காகவும், என்னைப் பின் தொடரக் கூடியவர் (உம்மத்)களுக்காகவும் இந்த பூமி முழுவதும் அவனை 'ஸஜ்தா' செய்யக் கூடிய பரிசுத்த பூமியாக ஆக்கப்பட்டுள் ளது. இதனால் மஸ்ஜிதில் மட்டுமின்றி ஒரு முஸ்லிம் எங்கும் தொழலாம், தண்ணீரைப் போல மண்ணும் உபயோகித்து 'தயம்மும்' மூலம் சுத்தமடைய எனக்கும், என்னைப் பின் தொடருபவர்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. ''யுத்தத்தில் எதிரிகளிடமிருந்து கிடைக்கும் பொருள்கள் எனக்கும், என்னைச் சார்ந்தோருக்கும் மட்டும் தான் உபயோகிக்க அனுமதிக்கப்(ஹலால் ஆக்கப்)பட்டி ருக்கிறது. வேறு நபிமார்களுக்கு இப்படி அனுமதி தரப்பட வில்லை.

7. ''என்னைப் பின் தொடருபவர்களுடைய கூட்டம் மற்ற நபிமார்களைப் பின் தொடரக் கூடிய கூட்டத்தாரை விட எண்ணிக்கையில் அதிகமிருக்கும். (இறுதி நாளன்று எல்லா நபிமார்களின் உம்மத்துக்கள் 120-வரிசையாக நிற்பர்; அதில் அண்ணலாருடைய உம்மத்துக்களின் வரிசை மட்டும் 90-ஆக இருக்கும்.)

8. ''இறுதி நாளில் மக்களுக்காக அல்லாஹ்விடம் பரிந் துரை (சிபாரிஷ்) செய்யும் தகுதி எனக்கு மட்டும் தரப்பட் டிருக்கும், முந்திய, பிந்திய எல்லோருக்குமாக நான் தான் பரிந்துரை செய்வேன்.

9. ''எல்லா நபிமார்களையும் முந்திக் கொண்டு நான் தான் என்னுடைய உம்மத்மார்களை அழைத்துக் கொண்டு 'புல்ஸிராத்' என்னும் பாலத்தைக் கடப்பேன்.

10. ''சுவர்க்கத்தில் முன்னதாக நான்தான் நுழைவேன்; அபூ பக்கரும், உமரும் என் வலப்புறத்திலும், இடப்புறத்திலும் இருப்பர், சுவர்க்கத்தில் எல்லா நபிமார்களுக்கென்று நீர்த் தடாகங்களிருக்கும்; ஆனால் எனக்கான நீர்த் தடாகம் தான் எல்லாவற்றையும் விட ஆகப் பெரியதாக இருக்கும்.''

உலகில் மக்கள் நான்கு வகையினராக உள்ளனர். அல்லாஹ்விற்கு இணைவைக்கும் 'முஷ்ரிக்'குகள்; அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிராகரிக்கும் 'காஃபிர்'கள்; இவ்விரு பிரிவினரும் ஒரே வகையைச் சார்ந்தவர்கள். மற்றொரு பிரிவினர் யூதர்கள்: இன்னொரு பிரிவினர் கிறிஸ்துவர்கள்; பிறிதொரு பிரிவினர் முஸ்லிம்கள், இந்நான்கு வகையினரிலும் உட்பிரிவுகள் நிறைய உண்டு. பொதுவாக இவர்களின் அடிப்படைக் கொள்கைகளைச் சுருக்கமாக ஆராயலாம்.

முதல் வகையினரான முஷ்ரிக்குகள் - கா:.பிர்கள்:

இவர்களுக்கு இந்த உலகம்தான் எல்லாம், மறுமை வாழ்வில் நம்பிக்கை இல்லாதவர்கள். இவர்களுக்காக அனுப்பப்பட்ட தூதர்கள், வேதங்கள் பற்றியத் திட்டமான ஆதாரங்களில்லாததால், சக்தி மிக்கவையெல்லாம் வழிபடக்கூடிய தெய்வங்கள் என்பதில் உறுதியான நம்பிக்கையுள்ளவர்கள். இதனால்தான் இவர்கள் வணங்கக் கூடிய தெய்வங்கள் எண்ணிலடங்காது போய் விட்டன. மனிதன் எழுதி வைத்த நூல்கள்தான் இவர்களுக்குப் புராணங்கள், இதிகாசங்கள் என்று நம்புவார்கள்.

இரண்டாம் வகையினரான யூதர்கள்:

இவர்களுக்காக அல்லாஹ், ஹஜ்ரத் மூஸா நபி (அலை) அவர்களை நபியாகவும், 'தவ்ராத்'தை வேத நூலாகவும் அருளினான். இவர்கள் வானவர்களையெல்லாம் அல்லாஹ்வின் 'மகன்கள்' என்று நம்புகின்றனர். சுவர்க்கம் இவர்களுக்

குத்தான் சொந்தம் என்று தாவா செய்பவர்கள். பல நபிமார்களுக்குத் தொல்லை கொடுத்து கொலை செய்துள்ளனர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்து வந்ததோடு அவனின் அருட்கொடைகளையும் நிராகரித்து வந்தவர்கள்.

மூன்றாம் வகையினரான கிறிஸ்துவர்கள்:

இவர்களுக்காக அல்லாஹ் ஹஜ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களை நபியாக அனுப்பி வைத்து 'இஞ்சீல்' என்ற வேதத்தையும் கொடுத்தான். இவர்கள் தங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நபியையே அல்லாஹ்வின் குமாரரென்று கூறி, அல்லாஹ்வுக்குள்ள சக்தி அனைத்தும் தங்கள் நபிக்கும் உண்டு என்பதில் உறுதியான கொள்கையுள்ளவர்கள். திரியேகத்துவக் கொள்கை உள்ளவர்கள். 'இயேசு', 'மேரி' என்று கூறி சிலைகளை வடித்து வணங்கி வருவதால் இத்தகையவர்களையும் 'இணை வைப்பவர்கள்' பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். சிலைகளை வணங்காது, ஈஸா நபியை அல்லாஹ்வின் மகனென்று கூறாத ஒரு பிரிவும் கிறிஸ்துவர்களில் உண்டு.

நான்காம் வகையினரான முஸ்லிம்கள்:

இவர்களின் மார்க்கத்திற்கு 'இஸ்லாம்' என்று பெயர். இதனைச் சார்ந்தவர்களையே 'முஸ்லிம்கள்' என்று அழைக்கப்படுவர். அல்லாஹ்தான் அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபக்குவமாக போஷித்து வருபவன்; அவனே வணக்கத்திற்குரியவன். அவனுக்கு இணை, துணை யாரும் கிடையாது. அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்கள் 'அல்லாஹ்வின் தூதர்தாம்!' என்பதில் உறுதியாக நம்பிச் செயல்படுபவர்கள், இவர்களில் யாரேனும் அல்லாஹ்வுக்குள்ள சக்தி எந்த நபிக்கோ, வலிக்கோ மற்றெவருக்கோ உண்டு என்று நம்பி உதவி கோரி விட்டால் அவரும் இணை வைக்கும் 'முஷ்ரிக்'குகள் கூட்டத்தில் சேர்ந்தவராகி

விடுகிறார். முஸ்லிம்களுக்கு அருளப்பட்ட வேதம் திருகுர்ஆன் ஆகும்.

மனிதர்களில் மிக உயர்ந்தவர்கள். அண்ணலார் மீது விசுவாசங் கொண்டு, அண்ணலாரின் வழிகாட்டுதலைப் பின் பற்றி, திருகுர்ஆனுடைய போதனைகளுக்குச் செவி சாய்த்து நடந்து கொள்பவர்கள். ஒரு முஸ்லிம் செய்யும் ஒரு நற் செயலுக்கு அல்லாஹ் பத்து மடங்கு, நாற்பது மடங்கு நூறு மடங்கு, ஆயிரம் மடங்கும் கூலி தருகிறான். ஒரு முஸ் லிமுக்கு உண்மையான வாழ்வு மறுமையில்தான் உண்டு. மறுமை வாழ்வை நம்பியே இவ்வுலக வாழ்வை நடத்திக் கொள்பவரே உண்மையான முஸ்லிம்.

அண்ணல் நபி (ஸல்-அம்) அவர்களின் வாழ்வில் நாம் பலபடிப்பினைகள் பெற முடிந்தது; பெற்ற படிப்பினைகளைச் செயலில் கொண்டு வருவோம்; வெற்றியடைவோம். இன்ஷா அல்லாஹ்.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் முஸ்லிமாகவே பிறக் கிறது; பிறந்த வளர்ந்த பின்தான் பெற்றவர்களின் கலா சாரத்தையும், பழக்க வழக்கங்களையும், மதக் கொள்கை களையும் பின்பற்றி மாறி விடுகின்றன.

முஸ்லிமாகப் பிறந்து, முஸ்லிமாகவே வாழ்ந்து, முஸ்லி மாகவே திருக்கலிமாவைக் கடைசி சொல்லாகக் கூறி மரிக்கும் அந்தப் பெரும் பாக்கியத்தை அல்லாஹ் நம்மனைவருக்கும் தந்து அருள் பாலிப்பானாகவும், ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத்;
யா றப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்